தென்மொழி

ஆர்த்த முரசே அறை!

கூர்த்த மதியுடையார் கூடித்
தமிழகமேல்
போர்த்த பகைகடியப் பொங்கினார்
என்றே நீ
சீர்த்த அரிமாப்போல் செங்கட்
புலியே போல்
ஆர்த்த முரசாய் அறைவாய்
தமிழ்மகனே!

தி. பி. ௧௯௯௭. துலாம் (ஐப்பசி)

ரூ 0 50 காசு

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே !

சுவடி–4 | ஐப்பசி தி. பி. ௧௯௯௭ (1966 அக்டோபர்) | ஓலை–9

ஆரியக் குறும்பு.

தமிழர்கள் அறியாமையில் மிகுந்திருந்த காலத்திலும், இரக்க உணர்வாலும் கொடைமடத்தாலும் தம்மை அண்டினூர் எவராயினும் அவரைக் கரவின்றிப் புரந்துவந்த காலத்திலும், பிராமணர்கள் என்னும் ஆரியப் பார்ப்பனர் தம் பிழைப்புக்காகவும் மேம்பாட்டுக்கு ஆகவும், பொய்யும் புனைசுருட்டும் மிடைந்த கதைகளையும், போலி வழக்கங்களையும் புகுத்தி மன, அறிவு, மெய்களால் தமிழரைத் தாழ்த்தி அவர் தம் நலன்களை உழைக்காமலேயே உண்டுவந்தனர் என்பதற்கு வரலாற்று வழியாகவும் வாய்வழிச் செய்தியாகவும் பல சான்றுகள் உள. அத்தகைய ஏமாற்று வேலைகளை ஆரியப் பார்ப்பனர்கள், இவ் விருபதாம் நூற்றாண்டுக் காலத்திலும் கைவிடவில்லை என்பதற்கு இன்று உள்ளூரவும் வெளிப்படையாகவும் நிகழ்ந்துவரும் நூற்றுக் கணக்கான நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டாக உள்ளன.

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:– தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

பார்ப்பனர்களின் கைக்கேடயங்களாக இன்று விளங்கி வருபவை அவர்கள் நடத்திவரும் செய்தித்தாள்கள், அவர்கள் மேலாண்மை செய்துவரும் வானொலி நிலையங்கள், அரசினர் அலுவலகங்கள், கல்வி நிலையங்கள் முதலியவை. இவற்றின் வழியாக அவர்கள் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் செய்துவரும் கேடுகள் கணக்கிலடங்காதவை. இவற்றைப்பற்றி எண்ணிப்பார்க்கவும் இடைவைக்காமல் அவர்கள் விடாது செய்துவரும் மடமைப் பொழிவுகளும், வெளியீடுகளும், நடைமுறைகளும் எதிர்காலத்தில் தமிழ்மொழியையே-தமிழர்களையேஅழித்து விடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது. பொதுமக்களுக்குத் தெரிந்த-மிகவும் புழக்கத்திலுள்ள சில சொற்களைக்கூடத் தமிழில் எழுதாமல் வேண்டுமென்றே வடமொழியிலேயே செய்தித்தாள்களில் எழுதிச் சமற்கிருதத்திற்கு ஆக்கந்தேடுவதும்,பார்ப்பனச்சேரியில் குஞ்சுங்குழுவானுமாகவுள்ள விடலைகள் முதல், திக்கொன்ருய்ச்சிதறிக்கிடக்கும்பார்ப்பனப் பாட்டுக்காரர்கள், பேச்சுக்காரர்கள் வரை பார்ப்பன ஆடவரையும் பெண்டிரையும் அவர்தம் அடிமைகளையும் கூட்டிப் பொறுக்கி வானொலிக் கூடத்தில் குழுமவைத்து 'அருள்வாக்கு' என்றும்,'ஸுப்ர பாதம்' என்றும், 'மதுரகீதம்' என்றும், 'கீத் மாலிகா' என்றும், 'கீதமஞ்சரி' என்றும், 'களி அரங்கு' என்றும், 'இசை அமுதம்' என்றும், 'சங்கீத உபந்நியாசம்' என்றும், 'மகிளா மண்டலி' என்றும், 'திண்ணைப் பேச்சு' என்றும், 'சிறுவர் கதம்ப நிகழ்ச்சி' என்றும், 'உரைச்சித்திரம்' என்றும், 'ஸமஸ்கிருத நிகழ்ச்சி' என்றும், 'ஊர்ச்சாவடி' என்றும், 'சூரிய காந்தி' என்றும், 'மணிமலர்' என்றும், 'பெண்ணுலகம்" என்றும், 'மெல்லிசை' என்றும், 'ஒளி மிகு பாரதம்' என்றும். 'விவசாயிகளுக்கு' என்றும், 'ஜயபேரி' என்றும், 'மாதர் நிகழ்ச்சி' என்றும், பலவாருக ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத கற்பனைக் கதைப்பு நிகழ்ச்சிகளை நடத்தி, அவற்றிற் கலந்து கொண்டமைக்காக ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான அரசினர் பணத்தை அவர்கள் பங்கிட்டுக் கொள்வதும், அரசினர் அலுவலகங்களில் மேலாளராகவும், செயலாளராகவும், தலைமையராகவும், கணக்காளராகவும், ஆய்நராகவும் அமர்ந்துகொண்டு எங்கெங்கெல்லாம் தமக்கும் தம் இனத்துக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமோ அங்கங்கெல்லாம் அவற்றைக் கொடுப்பதும், அவ்வழியில் குறுக்கிடும் தமிழர்களைப் பல்லாற்ருனும் கெடுப்பதும் நாம் நாள்தோறும் கண்டு மனம் புழுங்கி உள் நடுங்கும் செயல்களாகும்.

'மேட்டூர் அணைத்தண்ணீர்'என்றெழுதாமல் 'மேட்டூர் டாம் ஜலம்' என்றும் 'கண்ணீர்ப் புகை பூட்டப்பட்டது' என்பதைக் 'கண்ணீர்ப் புகை பிரயோகிக்கப்பட்டது' என்றும் 'கூட்டம்' என்பதைக் 'கோஷ்டி' என்றும் வேண்டுமென்றே எழுதித் தமிழைக் கெடுத்துவரும் அவர்களின் கேடயங்களான சுதேசமித்திரன், தினமணி, ஆனந்தவிகடன், கல்கி முதலிய நாள்கள் செய்யும் குறும்புத்தனங்களுக்கோ அளவில்லை. கீழுள்ள செய்தி அவர்கள் தாள்களில் ஒன்றான 'தினமணி'யில் வெளி வந்தது. அதனை அப்படியே தருகின்றோம்.

"சென்னை ராஜ்யத்தில் வறட்சிப் பிரதேசங்களில் ஸர்வே நடத்தி, அறிக்கை **சமர்ப்பிப்பதற்காக சர்வே கோஷ்டியைச் சர்க்கார் நியமித்தது.**

இதில் உள்ள 12 சொற்களில் 4 சொற்களே தமிழ்ச் சொற்கள். அவற்றிற்கும் வடமொழிச் சொற்களையே போட்டிருக்கலாம். தங்களின் கேடான எண்ணங்களைப் பிறர் எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடுமே என்று அவற்றைச் செய்யாது விடுத்தனர் போலும்! தமிழுக்கு இவ்வளவு கேடு செய்துகொண்டுவரும் நேரத்திலேயே, அவர் தம் மொழிக்கு எவ்வளவு அக்கறை காட்டப் பெறுகின்றது என்பதற்கு, அதே தாளில் அதே நாளில் வெளிவந்த கீழுள்ள செய்தியையும் பாருங்கள்.

"இது மகாரிஷிகளின் சமஸ்கிருதம்–நமது வேதங்கள் அனைத்தும் தர்மத்தை ஆதாரமாகக் கொண்டவை. வேதங்கள் உப-வேதங்கள் எல்லாவற்றையும் புதுப்பிக்க இந்த சதஸ் முயல்வது குறித்து சந்தோஷம்"என்று ஸ்ரீவெங்கடேஸ்வர ஆலய சம்ஸ்கிருத சதஸ் ஆண்டு பூர்த்தி விழாவில், பெரிய ஜீயர் ஸ்ரீரங்கராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள் தலைமையில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் சதஸ்ஸைத் துவக்கி வைத்து அருளுரை நிகழ்த்தினர்".

எப்படி...? ஒருபுறம் தமிழுக்குக் கேடு, மறுபுறம் ஆரியத்திற்குப் பாடு! இவ்விரண்டு முயற்சிகளுக்கும் பயன்படுவது அரசினர் பணம்; அல்லது அரசினர் கைவைக்க இயலாத – தேவையானால் இன்னும் போட்டு நிரப்புகின்ற கோயில் பணம். திருப்பதி கோவில் அதிகாரி கொடுத்த அறிக்கைப்படி மேற்குறித்த 'ஸ்ரீ வெங்கடேஸ்வர சமஸ்கிருத சதஸ்" தொடங்கிய மூன்று மாதக் காலத்தில் அவர்களின் திருவிளை

யாட்டிற்குச் செலவிடப்பெற்ற பணம் நாற்பத்தேழாயிரம் உருபா. அழைக்கப்பட்ட பார்ப்பன 'வேத பண்டிதர்கள்' 200 பேர்; 'வேத பாராயணக் காரர்கள்' 400 பேர். செய்த பணி பார்ப்பனர்களைத் தேவர் களாக்கும் ஆரியப் பூசல்களைப் பரப்புதல்! தமிழ்மொழியை அடிமைப் படுத்தும் சமற்கிருதத்தை எழுப்புதல். போதுமா? தமிழன் தூங்கிக் கொண்டிருக்கிறான் அல்லது அடிமைப்பட்டுக் கிடக்கிறான் என்பதற்கு இன்னும் என்ன சான்று வேண்டும்?

இதோ இன்னொரு பார்ப்பனக் குறும்பு!

நூற்றுக்கணக்கான கோடி உருபாக்களைக் கொட்டி மணலைப் புரட்டிக் கரியைத்தோண்டிய நெய்வேலியின் கைவண்ணமெல்லாம் தமிழன் செய்தவை. அங்கிருக்கும் கட்டிடங்கள் தெருக்கள் எல்லாம் தமிழரைக் கொண்டு கட்டப்பெற்றன. ஆனால் அங்குக் குடியமர்ந்த வர்களோ கெடுப்பது தமிழ்க்குடிகளை-தமிழ் மொழியை! தொழில்முறை யாலும் அதிகார முறையாலும் அங்கு நீக்கமற நிறைந்திருக்கும் ஆரியப் பேய்களின் கொண்டாட்டம் ஒருபுறம் இருக்க, மொழியைப் பொறுத்த அளவில் அவர்களின் கூத்து எப்படித் தமிழன்னையின் முகத்தில் கரி பூசும் வேலை என்பதை இன்றைய அரசியல் 'தமிழர்' கண்ணூன்றிப் பார்ப்பார்களாக! மொழிநலம் காப்பதாக வாய்ப்பறை சாற்றிக் கொண்டுள்ள காவலர்களும் நாவலர்களும் கலைஞர்களும் வேள் களும் இவற்றைக் கண்ணுற்ற பின்னும் தம் அரசியல் ஊடாட்டங் களுக்கு ஆரிய மாயைகளைப் பயன்படுத்துவார்களானால், அவர்தம் முயற்சி முற்றும் அரிமாவைக் குறிவைத்து அதன் நிழல்மேல் அம்பு விட்ட பேதையின் வேலையாகவே முடியும்.

நெய்வேலியில் வாரும் நிலக்கரியைக் காட்டி ஆரிய வேலி கட்டிக் கொண்டிருக்கும் அங்குள்ள பார்ப்பனர்கள் அங்கு 'வைதீக சமாஜம்' என்றும் 'கோகுலம்' என்றும், 'தபோ வனம்' 'மணித்வீபம்' என்றும் பல அமைப்புகளை ஏற்படுத்தித் தமிழ்க்கும் தமிழர்க்கும் நாளொரு கேடும் பொழுதொரு சூழ்ச்சியும் செய்தவண்ணமாகவே உள்ளனர் என்று அங்குள்ள தமிழர் பலர் மனம் புழுங்கி நமக்கு மடல்கள் எழுதியவாறே உள்ளனர். அண்மையில் வந்தமடல் அங்குள்ள தெருக் களின் பெயர்களைப் பற்றிய ஒரு விளக்கமாக அமைந்திருக்கின்றது. அம்மடலில் உள்ள ஒருபகுதியை அப்படியே குறிக்கின்றோம். "......மேற்கண்ட கூட்டத்தினரே (பார்ப்பனரே) அங்குள்ள வேலை களில் பெருவாரியாக உள்ளனர். தலைமை அதிகாரிகள் அத்தனைப்

பெயரும் அவர்களே. அவர்கள் 'சத்சங்கங்கள்' கூடி அங்குள்ள தெருக்களுக்குப் புதுமைப் (!) பெயர்களைச் சூட்டியுள்ளனர். அவற்றில் சில வருமாறு: உளுந்து தெரு, துவரைத் தெரு, பாதாம்கொட்டைத் தெரு, பருத்திக்கொட்டைத் தெரு, பிண்ணாக்குத் தெரு, பேனா தெரு, பென்சில் தெரு, பாய் தெரு, தலையணை தெரு, கருங்கல் தெரு, கத்தரிக்காய்த் தெரு, விசிறி சாலை, வளையல் தெரு......... இன்ன பிற. இப்பெயர்களை வேண்டுமென்றே அவர்கள் வைத்துள்ளனர். காரணம் நல்ல அழகிய தமிழ்ச் சொற்களாக வைத்தால் தமிழ்ப்பற்று வளர்ந்து விடக்கூடும் என்பதும், தாங்கள் தங்கள் உறவினர்களுக்கும் வேண்டியவர்களுக்கும் பல வேலைகளும் வேலை உயர்வுகளும் வழங்கி வருகின்ற முறைகேடான செயல்களில் தமிழர்க்கு எண்ணம் எழாமல் தடுக்கவேண்டும் என்பதுமே! இவற்றை முன்கூட்டியே கருதித் திட்டமிட்டு வைக்கப்பட்ட பெயர்களாகும் இவை. காந்தியடிகள், நேரு, திரு. வி. க, வ. உ. சி, மறைமலையடிகள் ஆகியவர்கள் பெயர்களையோ, அல்லது தமிழ் இலக்கியங்களில் பயின்றுவரும் புலவர் பெருமக்கள், மன்னர்கள், அமைச்சர்கள், மறவர்கள் வள்ளல்கள் ஆகியோர் பெயர்களையோ வைக்காத காரணம் அறவுணர்வும், தமிழ் உணர்வும் அரசியல் விழிப்பும், நேர்மையும்பற்றி மக்கள் எண்ணிப் பார்க்கவே கூடாதென்ற எண்ணந்தான்''

இந்த மடலுடன் அங்குள்ள தெருக்களின் பெயர்வரிசை ஒன்றும் வந்துள்ளது. அதில் எள்ளத்தக்கனவும், வருந்தத் தக்கனவுமான பெயர்கள்பல. அவற்றுள் தமிழில் தெருக்களுக்குப் பெயர்கள் வைக்க வேறு பொருள்களோ, ஆட்களோ, இயற்கையறிவோ, வாழ்க்கை அறிவோ தமிழர்களுக்கு அறவே இல்லையென்று அங்குவரும் பிற நாட்டினர் கருதும்படி அமைந்துள்ள பெயர்கள் மிகப் பலவாகும் காற்றாடி, தொப்பி, தொட்டில், சேவல், முயல், குடை, கோழி, கட்டில், நாடா, ஊதி, கஞ்சிரா, கொத்துமல்லி, காக்கைப்பொன், ஒட்டகம், துலை (தராசு), மத்தளம், கண்ணாடி, கூழாங்கல், சீப்பு, கோடரி, நூல், ஊசி, மாடு, மான், அம்பு, கட்டாரி, கிளி, வாள், தாழ்ப்பாள், புறா, வாத்து, கயிறு, கிண்ணம், பாக்கு, பறவை, கம்பளி, கலப்பை, விளக்கு, கரண்டி, குழாய், பனைமரம், தேங்காய், எலுமிச்சை, மயில், பசும்புல், முதலியவற்றின் பெயர்களிலெல்லாம அங்குத் தெருக்கள் உள்ளன. இதில் என்ன வியப்பு என்றால் இப் பெயர்களுக்கோ அத்

தெருக்களுக்கோ எந்தவகைத் தொடர்பும் இல்லை. தேங்காய்த் தெருவில் பெயருக்குக்கூட ஒரு தேங்காயையோ தென்னை மரத்தையோ பார்க்க முடியாது. ஊசித்தெருவில் ஊசி இருக்காது. குடைத்தெருவில் மழைக்கு ஒதுங்கவும் இடமிருக்காது. தச்சர் தெரு என்று ஒருதெரு; அங்குத் தச்சர் ஒருவரும் இலர். 'தோல்ஷித்தெரு' என்று ஒரு பெயர்! இப்படித் தம் மனம்போன போக்கெல்லாம், இவர்களின் 'வேத' மூளைக்கு எட்டியபடி யெல்லாம் 'தெருப்பொறுக்கியின் கையில் இருப்பூசி' கிடைத்ததுபோல் மண்டைக்குடுமி உதிர உதிர எண்ணி அவர்கள் இத்தகைய பெயர்களை ஏன் வைத்தல் வேண்டும்? அதுதான் ஆரியக்குறும்பு! அதற்குப் பொருள் இல்லாததுபோல் தோன்றும்! ஆனால் அதனால் ஓரினமே அழியும்; ஒரு மொழியே குலையும். இது வரலாறு.

இவற்றையெல்லாம் ஒருபுறம் வளரவிட்டுக் கொண்டு 'தமிழை வளர்க்கின்றேன்; இந்தியை எதிர்க்கின்றேன்' என்று வறட்டுப் பேச்சைக் கூட்டந்தோறும் பேசித்திரிவதில் என்ன பயன் விளையப் போகின்றது? இவற்றைப் பார்க்கையில் நாம் காலங்கருதி இடத்தால் செய்யவிருக்கும் வினையைக், காலங்கருதாமலும் இடம் கருதாமலும் செய்தால் என்ன? என்று எண்ணத் தோன்றுகின்ற தில்லையா? தமிழ் மானம் உள்ளவர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக!

— பெருஞ்சித்திரன்.

'விடுதலை'யில் 'சாதி'

நாம் ஒரு தவற்றைப் பிறர்க்குச் சுட்டிக்காட்டித் திருத்தம் செய்து கொண்டு வருங்கால், நாமே அத்தவற்றைச் செய்யாமல் இருக்கின்றோமா என்று விழிப்புடன் பார்த்துக் கொள்ளல் வேண்டும். 'நான் சொல்வதுபோலச் செய்; ஆனால் நான் செய்வது போலச் செய்யாதே' (Do as I say; but don't do as I do) என்று பொது மக்களிடம் சொல்லுதல் கூடாது. 'ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னு முயிர்க்கு?' என்று வள்ளுவர் கேட்டிருக்கின்றார். பொதுவான மாந்தனுக்கே இந்த இலக்கணம் என்றால் பொதுத்தொண்டு, குமுகாயச் சீர்திருத்தம் செய்யவேண்டிய வர்களுக்கோ இக்கண்ணோட்டம் மிகுதியும் வேண்டும்.

பெரியார் ஈ. வே. இரா. அவர்களின் இயக்க இதழாக நடந்து வரும் 'விடுதலை', தமிழகத்தின் தன்மதிப்புக் கழக ஏடாகும். பகுத்தறிவுக்கேற்ற செய்திகளுக்கும், குமுகாயச் சீர்திருத்தச் செய்திகளுக்குமே இன்றியமையாமை காட்டி வெளிவரும் 'விடுதலை' இதழில், சாதிப் பெயர்கள் வருவது வருந்தற்குரியதுமட்டுமன்று; கண்டித்தற்குமுரியது. ஏனெனில் 'விடுதலை' கொண்ட குமுகாயத்திருத்தங்களுள் 'சாதி' யொழிப்பும் தலையாய வேலை யில்லையா?

எடுத்துக் காட்டாகக் கடந்த சில 'விடுதலை' இதழ்களில் வந்த 'சாதி'ப் பட்டங்கள் நம்மை மிகவும் வருந்தவும் நாணவும் செய்கின்றன.

பெரியாரவர்கள் 4-10-66 அன்று குடியேற்றத்தில் பேசவிருந்த விளம்பரத்தில் "எம். வி. சாமிநாத முதலியார் தலைமையில் பெரியார் பேசுவார்" என்று வெளியிட்டிருப்பதும், 13-9-66 அன்றைய தாளில் 29-8-66 அன்று மாத்தூரில் பெரியார் தலைமையில் நடந்த திருமணத்தில் திரு. சகதீச முதலியார் அவர்களும் பேசினார் என்று வந்திருப்பதும், பெரியார் விழாக்குழுவின் பெயர்களை வெளிப்படுத்திய பட்டியலில் (4—10—66) திரு. ஏ. எசு. சி, உலூர்துசாமிப் பிள்ளை, திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, திரு. அ. வெ. ரா. கிருட்டிணசாமி ரெட்டியார் முதலியவரும் உளராகக் காட்டியிருப்பதும், 'விடுதலை'யின் சாதியொழிப்புக் கொள்கைக்கு இழுக்கைத் தேடுவனவாகும். உலூர்துசாமி, நாராயணசாமி, கிருட்டிணசாமி என்று திருத்தி வெளியிடுவதால் அவர்கள் எல்லாரும் வருந்துவார்கள் என்றால், ஈ. வே. இராமசாமி நாய்க்கர் என்று தினமணி, சுதேசமித்திரன் வெளியிடுவதற்காகப் பெரியார் மகிழ்கின்றார் என்பது பொருளா? அல்லது வருந்துகின்றார் என்றால் அதில் என்ன பொருளிருக்கின்றது? இங்கெடுத்துக் காட்டப்பெற்ற எடுத்துக்காட்டுகள் ஓரிரண்டே! ஒவ்வொருநாளும் விடுதலையில் இத்தகைய சாதிப் பட்டங்கள் எவர் பெயருடனாவது ஒட்டிக்கொண்டுதாம் வருகின்றன. இது பெரும்பாலும் ஆசிரியர் பிழையாகும். இத்தவற்றைக் கவனித்து உடனே திருத்திக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம். இல்லையேல் இது பெரியாரின் கொள்கைக்குப் பேரிழுக்காகும் என்பது சொல்லித் தெரிதல் வேண்டா.

– பெருஞ்சித்திரன்.

அவர் நினைவாக

கன்னக்கோல்காரன்

பாவேந்தர் பாரதிதாசன்

—:o—

பார்ப்பான் இனப் பகைவன்என்றான் முன்னாளில் – அந்தப்
பார்ப்பான் காலைப் பணிந்துநின்றான் இந்நாளில்
(பார்)

ஊர்க் கோயிலின் உருவெறுத்தான் முன்னாளில் – அந்த
உருவெல்லாம் கடவுளென்றான் இந்நாளில்
(பார்)

தீர்ப்பாய் ராமன் மனிதன்என்றான் முன்னாளில் – அந்தச்
சீராமன்தான் கடவுள் என்றான் இந்நாளில்
(பார்)

சேர்க்கவேண்டாம் பார்ப்பை என்றான் முன்னாளில் – மிகத்
தேவைஅவன் தலைமை என்றான் இந்நாளில்
(பார்)

பேரைச்சொல்லப் பார்ப்பான் என்றான் முன்னாளில் – அவனே
பிராமணன் என்று சொன்னான் இந்நாளில்
(பார்)

ஆரிய ரூர் சேரிஎன்றான் முன்னாளில் – அவனே
அக்ராகாரம் என்று சொன்னான் இந்நாளில்
(பார்)

ஓர் தமிழே வாழ்கஎன்றான் முன்னாளில் – அவனே
உயர் மொழிதான் இந்திஎன்றான் இந்நாளில்
(பார்)

பார் தமிழன் நான்என்றான் முன்னாளில் – அவனே
பார்ப்பான் மகன் நானேஎன்றான் இந்நாளில்
(பார்)

என்னென்று சொல்வோம்?

துறக்க மென்பார்; இறைப் பணியென்பார்; அன்பென்பார்;
தொலைசென்று கற்றவர் என்பார் – கண்
உறக்க மிலாதுயிர்த் தொண்டென்பார்; பணியென்பார்
உலகெலாம் ஒன்றென ஆர்ப்பார்!
சிறக்க வுண்பார்; உடுப்பா ரருஞ் செயல்களைச்
சிறப்புறச் செய்தனம் என்பார் – ஆனால்
பறக்கும் பறவைக்கும் விலங்குக்கும் இல்லாத
பல் 'சாதி' ப் பிரிவுகள் கொள்வார்.

வளியும் எழுசுடர் ஒளியும்ஆய் வார்;கடல்
வண்ணமும் மண்ணையும் ஆய்வார் – புற
வெளியும் உலாவி விண் கோளுக்குஞ் சென்றுயிர்
வீழ்வையும் வென்றனம் என்பார்!
துளியும் மடமை யிலாதெங்கும் ஓட்டியே
தோற்றுவோம் புத்துல கென்பார் – ஆனால்
நெளியும் புழுவுக்கும் பாம்புக்கு மில்லாத
நெடுஞ் 'சாதி' ப் பிரிவுகள் கொள்வார்!

மருவறப் பேணுக உடலென்பார்; உளமென்பார்!
மற்றுயிர் போற்றுக வென்பார்! – நிலத்
தொருவருக் குணவிலா திருந்திடில் உலகத்தை
ஒழித்திடு வோம்; உண்மை யென்பார்!
தெருவற ஊரற நாள்தோறும் கூட்டங்கள்
திட்டங்கள் பற்பல செய்வார் – ஆனால்
கருநிறக் காக்கைக்கும் கழுகுக்கும் இல்லாத
கடுஞ் 'சாதி' ப் பிரிவுகள் கொள்வார்!

எவர்முகங் கண்டாலும் இழி 'சாதி'க் குறிகள்;ஈங்
கெவர்பெயர் பினனுக்கும் வால்கள் – தெருச்
சுவர்களில் இல்லக் கதவுகள் தம்மிலும்
சூழ்ந்தன இழி 'சாதி'ப் பேய்கள்!
அவரவா குலத்துக்குத் தனித்தனிக் கழகங்கள்!
அவரவர் குலத்துக்குப் பள்ளி – கற்ற
எவரெவர் ஆனாலும், குலவெறித் தீமைக்கே
இழுக்குவர்! என்னென்று சொல்வோம்!

துரை-மாணிக்கம்

குறிப்பு வினை

க. ப. அருணசலம். பி. ஓ. எல்.
தமிழ் ஆராய்ச்சித்துறை
திருவனந்தபுரம்.

ஒரு பொருளின் தொழிலை உணர்த்தவருஞ் சொல் வினைச்சொல் எனப்படும். அது வேற்றுமை உருபுகளை ஏற்காது; பெரும்பாலன காலத்தை உணர்த்திவரும்.[1] அவ்வினைச்சொல், தெரிநிலைவினை எனவும், குறிப்புவினை[2] என்வும் இருவகைப்படும்.

தெரிநிலை வினையில் காலம் தெளிவாகத்தோன்றும்; அவை வினையடிகளைக் கொண்டே பிறக்கும். குறிப்பு வினைச்சொற்கள் வினையடியினின்று பிறக்கா; பெயரடியினின்று பிறக்கும்; காலத்தைக் குறிப்பாற் புலப்படுத்தும் என்பது பலர் கருத்து.

'செய்தான் > செய்+த்+ஆன் — தெரிநிலைவினை
நல்லன்' > நன்மை+அன் — குறிப்புவினை

தெரிநிலை வினை எடுத்துக்காட்டில், 'செய்' என்ற வினையடியும் 'த்' என்ற இறந்தகாலம் உணர்த்தும் இடைநிலையும் உள்ளன.

நல்லன் என்ற குறிப்பு வினையில் நன்மை என்ற பண்புப் பெயரடியும், அன் என்ற ஆண்பால் விகுதியும் (ந. சூ. 140) உள்ளன. வினைச்சொல்லுக்குரியன எனக் கருதப்பெறும் வினையடியும் இல்லை; தெளிவாகக் காலம் உணர்த்துதலும் இல்லை. வினைச்சொல்லின் வகையுள் ஒன்று எனக் கருதப்படும் குறிப்புவினை, வினையடியினின்று தோன்றுமல் பெயரடியினின்று தோன்றுகிறது. அவ்வாருயின்

1, வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலை காலமொடு தோன்றும். தொல். சொல். 198,

2 குறிப்பு வினையைத் தொல்காப்பியர் 'குறிப்பு' [சொல். 200, 201, 214, 220, 427, 432] என்ற சொல்லாலும், 'குறிப்பொடு வருஉம் காலக்கிளவி' [215, 221] என்ற தொடராலும் வழங்குவர். உரைகாரர்களின் பெரும்பான்மை வழக்கு வினைக்குறிப்பு என்பது. குறிப்பு வினை என்ற வழக்கு பிற்காலத்தது.

குறிப்புவினை என்ற பாகுபாடு தேவைதானு?
பெயரடினின்று தோன்றும் சொல் எப்படி
வினைச் சொல்லாக இருக்க முடியும்?

என்ற வினுக்களை எழுப்பி, அதனையொட்டிப் பல்வகைச் சொற்போர் புரிந்து குறிப்புவினை என்ற பாகுபாடு தேவையற்றது என்ற முடிவுக்கு அறிஞர் சிலர் வந்துள்ளனர்.

'குறிப்பு வினை, நிகழ்காலம் ஒன்றைத் தவிர வேறுகாலம் உணர்த்தவில்லை' என அறிஞர் கால்டுவெல்லும்[1], குறிப்புவினைச் சொற்கள், வினைச்சொற்கள் அல்ல அவையும் பெயர்ச்சொற்களே என வீரமாமுனிவரும் கூறுவர்[2].

பர். மு. வரதராசனுர் இதுபற்றி மேலும் ஆராய்ந்து 'குறிப்பு வினை என்பது ஒன்றில்லை, சில பெயர்ச்சொற்களே பயன்வகைநோக்கி அவ்வாறு கொள்ளப்பட்டன' என்றுரைப்பர்[3]. பர். மு. வ, வின் விரிவான அக்கட்டுரை எழுப்பிய தடைகளுக்கு விடைகொடுத்துக் குறிப்பு வினை என்ற பாகுபாடு தவிர்க்க முடியாதது, அது மிக இன்றியமையாதது எனத் திட்டவட்டமாக பேரா. பர்: வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் விடையிறுப்பர்[4].

குறிப்பு வினைபற்றி இதுவரை வெளிவந்த ஆய்வுகள், குறிப்பு வினை - பண்படிவந்த வினைச்சொல், காலத்தைக் குறிப்பால் உணர்த்துவது என்ற இலக்கணங்களுக்கு உடன்பட்டு எழுந்து நிகழ்ந்தவையே. இக்கட்டுரை குறிப்புவினை, குறிப்பால் உணர்த்துவது காலத்தைத் தானு? என்பதைப்பற்றி ஆராய்கிறது.

அந்த ஆராய்சிக்குச் செல்லுமுன் சிலவற்றை ஈண்டு விளக்குவது நல்லது.

---

1. Caldwell., A Comparative Grammar of the Dravidian Languages. P. 478.
2. They are called 'வினைக்குறிப்பு' the sign of the verb that is, nouns serving like a verb, to express some action or passion C. J. Beschi - A Grammar of the High Tamil P. 45.
3. Tamil culture: vol. viii No. 2. APL. JUN 1959. P. 84.
4. செந்தமிழ்: தொகுதி 56. பகுதி 4. சித்திரை இதழ்: 1960. P. 20.

1. பெயர்ச் சொற்களோடு அன்முதலான விகுதிகள் சேர்ந்து குறிப்பு வினைச் சொல்லமைந்தது என்பது தமிழின் இயல்புக்குப் பொருந்தாது என்பது பேரா. மு. வ. வின் கருத்து.[1] இந்த எண்ணம், வினைச்சொல்லின் அடியாக, வினையடிதான் இருத்தல்வேண்டும் என்ற நம்பிக்கையில் எழுந்ததாதல் வேண்டும். இந்நம்பிக்கை சரியானது தானா? என்பதை ஆராய்வோம்.

வினைச்சொல், வினையடியை மட்டும் கொண்டு பிறப்பதில்லை. அவை பெயரடியைக் கொண்டும், இடைச்சொல்லடியைக் கொண்டும், உரிச் சொல்லடியைக் கொண்டும் பிறக்கலாம்; பிறக்கின்றன.

எ டு. கண் — பெயர்ச்சொல்

↓

கண்டான் — வினைச்சொல்

போல் — இடைச்சொல்

↓

போன்றான் — வினைச்சொல்

சிவப்பு — உரிச்சொல் (தொல். சொல். 372.)

↓

சிவந்தான் — வினைச்சொல்

இவற்றினின்று உணர்வது: வினைச்சொல்லுக்கு அடியாக வினைச் சொல்லாகவே இருத்தல்வேண்டும் என்பதில்லை;[2] பெயரடியாகவும், இடையடியாகவும் உரியடியாகவும் இருக்கலாம் என்பதே.

'பெயர்வினை இடையுரி நான்கடி யானும்
பிறக்கும் வினையெனப் பேசுவர் புலவர்'[3].

எனவரும் இலக்கணக்கொத்து நூற்பாவும். இக்கருத்தை வலிவு படுத்தும். ஆதலின், குறிப்பு வினையின் அடி பெயராக இருப்பதாலேயே, அது குறிப்பு வினையன்று என்ற கருத்து பொருத்தமற்றதாகிறது.

---

1. Tamil Culture: Same Issue P. 88.
2. 'edit' என்ற ஆங்கில வினையடிச்சொல், editor - என்ற ஆங்கிலப் பெயரடியாகப் பிறந்தது என்பர். The oxford English Dictionary Vol. III. P. 43.
3. இலக்கணக்கொத்து நூற்பா. 68.

2. கால இடைநிலை பெற்று வாராதது குறிப்பு வினை, கால இடைநிலை பெறாமல் வரும் இயல்பு பெயருக்கே உரியது; வினைக்குரிய தன்று எனக்கருதி, குறிப்பு வினை, வினையின் பகுப்பன்று என்பர்[1].

வினைச்சொல்லின் முதல் இலக்கணம் வேற்றுமை கொள்ளாது என்பதே. காலமொடு தோன்றும் என்பது அதன் துணையிலக்கணமே[2] குறிப்பு [வினை], [தெரிநிலை] வினை என்ற இரண்டிற்குமே காலங் காட்டும் தன்மையுண்டு என்பர் தொல்காப்பியர்[3]. குறிப்பு வினையில், காலத்தெளிவு இல்லாதிருப்பதே, அதன் வினைப்பகுப்பின்மையைக் காட்டும் என்பது பொருந்தாது. ஏனெனில் நட, வா, மடி[4]. முதலாய ஏவல் வினைகளுள்ளும், செய்யான், வாரான் முதலாய எதிர்மறை வினைகளுள்ளும், வாழ்க, வாழிய எனவரும் வியங்கோள் வினைகளுள்ளும் வெளிப்படையாகக் காலம் உணர்த்தும் இடைநிலைகள் இல்லை. அதனாலேயே அவை வினைச்சொற்கள் அல்ல என்ற முடிவுக்கு வருவோமா? ஆதலின் 'குறிப்பு வினையில் காலம் உணர்த்தும் இடைநிலை இல்லாதிருப்பதே, அது வினைச்சொல் வகையுள் அடங்காதது என்பதைக் காட்டும்' என்ற கூற்று முரண் உடையதாகிறது. ஒரு மிதிவண்டி (Cycle), கந்தன், குப்பன், சுப்பன் என்ற மூவருக்கும் பொதுவானது என்றால் கந்தனுடைய மிதிவண்டி என்றோ, குப்பனுடைய மிதிவண்டி என்றோ சுப்பனுடையது என்றோ தனி அறிக்கைப்பலகை தேவைதானா? அதுபோலக் குறிப்புவினை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என முக்காலமும் கொள்ளும் பொதுவியல்பினது[5]. அவ்வாறாயின் இன்னகாலம் என உணர்த்த இடைநிலை தேவை எனக் கூறுவது முறையானது அன்று.

இனி, குறிப்புவினை, குறிப்பால் உணர்த்துவது காலத்தைத் தானா என்பது ஆராயப்படவேண்டும்.

வினைச்சொல் வேற்றுமை ஏற்காது என்ற முதல் இலக்கணத்தை விட்டுவிட்டு, காலத்தை அடிப்படையாகக்கொண்டு வினைச்சொல்லைப்

---

1. Tamil culture Same Issue. P 86 and 89.
2. மொழியியல். ரா. சீனிவாசன். பக். 212. (1960)
3. குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
   காலமொடு வரூஉம் வினைச்சொல் - தொல். சொல். 201.
4. நன்னூல். 137.
5. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
   அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்
   –தொல். சொல். 200

பகுத்தமுறை பிற்காலத்தது. உரையாசிரியர்களும், பிற்கால இலக்கண ஆசிரியர்களும் வினைபற்றிக் குழப்பிவிட்ட குழப்பமே பல புதிய சிக்கல்களுக்கு வித்திட்டு விட்டது.

காலத்தைக் குறிப்பாக உணர்த்துவதே குறிப்பு வினையின் வேலை என்றால் அதனை வினைக்குறிப்பு என வழங்காது 'காலக்குறிப்பு' என்றே வழங்கியிருக்கலாமே? அவ்வாறு வழங்காததன் காரணம் என்ன?

வினையியலில் முதன்மையாகக் கூறவேண்டியன, கூறப்படுவன வினைபற்றிய பகுப்பா? அல்லது குறிப்பாகக் காலம் காட்டுவன, தெளிவாகக் காலம் காட்டுவன என்பவைபோன்ற காலம்பற்றிய பகுப்பா?

நீரைப்பற்றி உணர்த்த வந்தவன் 'இது சுடுநீர்' என்றும், இது 'குளிர்நீர்' என்றும் உரைக்கின்றான், எனின் ஈண்டு உணரவேண்டியது நீரைப்பற்றிய இருவகையையா? பிறவற்றையா?

குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக் காலமொடு வருவது வினைச்சொல். அது வேற்றுமை கொள்ளாது, நினையுங்காலை காலமொடு தோன்றும் என்பது தொல்காப்பியர் உணர்த்தும் வினைச்சொல் இலக்கணம்.

தொழிலை வெளிப்படையாகத் தெளிவாக உணர்த்துவது தெரிநிலை வினைச்சொல். இதற்கு மறுதலையாக

தொழிலை (வினையை)க் குறிப்பாக உணர்த்துவது குறிப்பு வினைச்சொல். (வினைக்குறிப்பு[1] - வினையைக் குறிப்பாக உணர்த்துவது இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்கதொகை.)

சுடுநீர் என்புழி சூடான நீர் என உணருமாறுபோல, குறிப்பு வினை என்புழி, குறிப்பான் உணர்த்தப்படும் வினை என்றே அறிதல் வேண்டும். 'குறிப்பு' என்ற அடை வினைக்குக் கொடுக்கப்பட்ட அடையே ஒழிய, காலத்திற்குக் கொடுக்கப்பட்ட அடையன்று.

---

1. தொல்காப்பியர் 'குறிப்பு' என வழங்கும் குறிப்பு வினையை நன்னூலார் வினைக்குறிப்பு என்றே பெரும்பான்மை வழங்குவர். பார்க்க: ந. நூ. 269, 321, 347, 349, 350. 'குறிப்பு' என இரண்டிடங்களில் வழங்குவர். ந. நூ. 328, 351.

இவ்வாறு கொள்வதற்கு வாய்ப்பாக, சேனாவரையரே ஒரு குறிப்புத் தருகிறார். வினையியல் நான்காம் நூற்பாவுக்கு[1] விரிவுரை எழுதும்போது,

'தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப்படுதலின் குறிப்பு என்றார்' எனக் குறிப்பிடுகின்றார் இலக்கணக் கொத்துடையார்.

'தெரியா நிலைவினை குறிப்பு வினை' -[2]

எனக் குறிப்பு வினையை வழங்குதலும் ஈண்டுக் கருதற்குரியது.

அடுத்து, குறிப்புவினை உணர்த்தும் 'தொழில்' என்ன? எத்தன்மையது? என்பது ஆராயப்படவேண்டும்.

தொல். சொல். வினையியல் 210, 213, 214, 219, 220, ஆகிய நூற்பாக்களால், தொல்காப்பியர் குறிப்பு வினையாக வருவன எவை எவை என்பதைத் தெளிவாக உணர்த்துகிறார்.

கச்சினன் — ஆறும்வேற்றுமை உடைமைப் பொருள்பற்றிய குறிப்பு

நிலத்தன் — ஏழாம்வேற்றுமை இடப்பொருள்பற்றிய குறிப்பு

பொன்னன் — உவமப்பொருள்பற்றிய குறிப்பு

கரியன் — பண்பு பற்றிய குறிப்பு

அல்லன்
இல்லன் } — அன்மை, இன்மை பற்றிய குறிப்பு

உண்டு — உண்மைபற்றிய குறிப்பு

இக்குறிப்புகள் உடைமை, இடம், உவமை, பண்பு முதலிய தன்மைகளின் அடிப்படையில் அமைபவை. இக்குறிப்புகளின் அடிப்படையில் தோன்றும் வினைகளைக் குறிப்புவினை என்று குறிப்பிடுகின்றார்[3].

---

1. தொல். சொல். 201. சேனாவரையம்
2. இலக்கணக்கொத்து. நூ. 67.
3. தொல். சொல். 213.

நல்லன் - என்பது ஒருவனுடைய இயற்பெயர் (Proper name) ஆயின் அது குறிப்பு வினையன்று. நேற்றுவரைத் தீயனாக ஒழுகி, இன்று நல்லதன்மையுடையன் ஆயினானைப் பார்த்து 'நல்லன்' எனக் கூறின் அதுவே குறிப்பு வினையாம்.

'ஒருவன் பிறந்தபோதே அவனுக்குக் கரியன் என்று பெயர் வைக்கப்பட்டிருந்தால், அச்சொல் குறிப்பு வினையாகாது. ஒருவன் செம்மை நிறமுடையவனாகவிருந்து; பின் ஏதோ காரணத்தால் கருநிற முடையனானால், அப்போது அவன் கரியன் என்றழைக்கப்பட்டால், அச்சொல் குறிப்பு வினையாகும்[1], என்றுரைக்கும் இலக்கணப்புலி ஆ- பூவராகம் அவர்களுடைய கருத்தினையும் கருதிப்பார்க்க'

இதுபோனறு ஒரு சொல்லுக்கே இரண்டு நிலைகள் உண்டா என ஐயம் எழலாம். அவ்வாறு இரண்டு நிலைகள் உண்டு சிறப்பாக குறிப்பு வினைக்கு உண்டு.

யார் என் வினாவினைக் குறிப்புயர் முப்பால் - ந. நூ, 349.

எவன் என் வினாவினைக் குறிப்பு இழி இருபால் ந. நூ. 350. இந்நூற்பாக்களால் யார், எவன் என்பன வினாவினைக் குறிப்பு முற்று கள் என்பதுணரப்படும். ஈண்டுக் குறிக்கப்படும் யார் என்பது வேறு; பெயர்க்கும் வினைக்குறிப்பிற்கும் பொதுவாகிய யாவர் என்னுஞ் சொல் யார், ஆர் என மருவி வழங்கும் உயர்திணைப் பன்மைச்சொல் வேறு. இவ்வாறே பெயர்க்கும் வினைக்குறிப்பிற்கும் பொதுவாகிய எவன் என்னும் உயர்திணை ஆண்பாற் சொல் வேறு; அஃறிணை ஒன் றற்கே உரிய எவன் என்னும் வினாவினைக் குறிப்பு வேறு[2].

'அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினாவே[3] – தொல்

என்னும் நூற்பாவுரையில் சேனாவரையர்,

'எவன் என்பதோர் பெயரும் உண்டு; அஃதிக் காலத்து என் என்றும் என்னையென்றும் நிற்கும். ஈண்டுக் கூறப்பட்டது வினைக் குறிப்புமுற்று என்க – என எழுதுகிறார். மேற்கண்ட சேனாவரையர் விளக்கத்தினின்று – ஒருவடிவச் சொல்லுக்கும் பெயர்ப் பொருளும் வினைப் பொருளும் உண்டு என அறிகிறோம்.[4]

---

1. சேனாவரையம் விளக்கவுரை. ஆ. பூவராகம்பிள்ளை பக். 104.
2. நன்னூல் விருத்தி. 350. 3. தொல். சொல். 219.
4. மலர் - என்ற சொல்லே 'பூ' (Flower) எனப் பெயர்ப் பொருளிலும், விரிதல் (Spreading) என வினைப்பெருளிலும் வழங்குதல் காண்க காதலி, விழி, பூண் என்பனவும் காண்க.

ஆகவே, நல்லன், கரியன் என்பன இயற்பெயர் என்பது ஒருநிலை; அகவே பிறிதோர் இடத்தில் ஆக்கத்தை உணர்த்தும்போது குறிப்பு வினை எனப்படுவது பிறிதொரு நிலை. குறிப்பு வினை, குறிப்பாக உணர்த்துவது 'ஆதல்' என்ற ஆக்க வினையைத்தான் என்பதை நாம் இங்கு உணர வேண்டும்.

குழையன்(குழையை உடையன்)என்ற தொடரில் 'உடைத்தாதல்' என்பது மறைந்துள்ளது. [1] 'உடைமை' என்ற சொல்லிற்குப் பரிமேலழகர், 'உடையனாந் தன்மை' என விரிவுரை எழுதுதல் காண்க. [2] உடையன் + ஆம் + தன்மை; ஆம்- என்பது ஆகும் என்னும் ஆக்க வினையின் குறுகிய வடிவம். [3]

கச்சினன்—கச்சணிந்தவன் ஆயினான்
நிலத்தன்—நிலமுடையவன் ஆயினான்

இவ்வாறு ஒவ்வொரு குறிப்பு வினையையும் விரித்துக்கொள்க.

இத்தகு ஆக்க வினையைக் குறிப்பாக உணர்த்துவனவே குறிப்பு வினை என வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும். நன்னூலாரும் வினைக் குறிப்பை 'ஆக்கவினைக் குறிப்பு' என்றே அழைக்கின்றார். [4]

வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே-

தொல். சொல். 432

வினையெச்சத்திற்குத் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் முடிபாம்; ஆண்டைக் குறிப்புவினை ஆக்கவினையோடு வரும் என்பது நூற்பாவின் பொருள். வினையெஞ்சு கிளவிக்கு ஆக்கவினை வெளிப்படையாக

---

1. கழகத்தின் 1008-வது நூல் வெளியீட்டு விழாமலர்- 'ஒற்றுமைப்படுதல்' எனும் பேரா.வி ஐ. சுப்பிரமணியம் அவர்களது கட்டுரை பார்க்க. பக். 136
2. திருக்குறள். அன்புடைமை: 74.
3. தெ. பொ. மீ. மணிவிழாமலர், பேரா. மு. வ. வின். 'ஆம்' எனும் கட்டுரை. பக். 307
4. 'ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியவா-நன். 347. இந்நூற்பாவிற்கு இயைபின்மை நீங்கலாகப் பொருள் கொள்க.

கா விரிக்கும் காவிரி !

"குயில்"

காவிரிக்கும் காவிரிதான் ஆறு – அது
கன்னியைப்போல் அசையுமெழில் கூறு – அவள்
காட்டுகின்ற காட்சியெலாம்
பாட்டமுதில் தோய்ந்தகனிச் – சாறு
இன்பப் பேறு !

பாவிரிக்கும் பாவலர்கள் கண்டு – அப்
பைங்கொடியின் அழகையெலாம் உண்டு – தமிழ்ப்
பாருலகே மேலுலகின்
சீருலகாம் என்றறைவார் – ஆர்த்து
தூக்கிப் பார்த்து !

பொங்கிவரும் புனலமுதை ஊட்டி – நற்
பூவுலகில் நெற்பயிரைக் காட்டி – பொன்
பொருளனைத்தும் தமிழகத்தில்
பொங்கவைக்கும் தன்மையினுள் – பொன்னி
புனல் கன்னி !

முன்பக்கத் தொடர்ச்சி)

வருதல் வேண்டும் என்பதனுல் மற்றஇடங்களில் ஆக்கவினை மறைந்து வரும் என்பதும், அது குறிப்பால் உணரப்படுதல் வேண்டும் என்பதும் உய்த்துணரப்படும். இதனுனும், குறிப்புவினை முற்றில், குறிப்பாக உணர்த்தப்படுவது வினையே என்பதும், காலம் அன்று என்பதும். அவ்வினையும் பெரும்பாலும் ஆக்கம்பற்றி வருவதே என்பதும் தெளியப்படும்.[5] O

---

5. நன்னூல் விருத்தியுரைகாரர், குறிப்புவினையை, இயற்கை வினைக்குறிப்பென்றும், ஆக்கவினைக் குறிப்பென்றும் இரண்டாக்குவர் [நன்:347] வினை எனக் குறிக்கப்படுவன அனைத்தும் செயற்கையே. அவற்றுள் இயற்கை என ஒன்றில்லை. வினை, செயல், தொழில், அசைவு, புடைபெயர்ச்சி என்பன அனைத்தும் ஒரு பொருளின் இயக்கத்தைக் குறிக்க வந்தனவே. ஆதலால் இயற்கைவினைக் குறிப்பு என்ற பகுப்பு அத்துணை இன்றியமையாத ஒன்றன்று. இத்தகு பகுப்பைத் தொல்காப்பியரோ, நன்னூலாரோ வெளிப்படையாகக் கூறவும் இல்லை. அவை உரையாசிரியர்கள் படைத்து மொழிந்தவையே.

மங்குலுறு கதிரவனி னின்று – இம்
மண்ணுலகம் தோன்றியநாள் அன்று – தமிழ்
மாமொழியின் உடன்பிறந்து
மாட்சியுற எமைவளர்த்தாள் – நன்று
பகை வென்று.

ஆடுகின்ற கோலவண்ண மயில்கள் – இசை
அமிழ்தளவிப் பாடுகின்ற குயில்கள் – கரை
அடர்ந்திருக்கும் சோலைகளில்
படர்ந்திருக்கும் கிளைகளிடை – திரியும்
எழில் விரியும்.

ஆடுகின்ற மயிலழகைக் கண்டு – தன்
அருந்துணையை மறந்துமயல் கொண்டு – ஓர்
ஆண்குரங்கு நிற்கமந்தி
சேண்கிளையில் தனித்திருந்து – வாடும்
பின்னர் ஊடும்.

பசுமைநிறச் சோலைகளி னூடு – நீர்
பான்மையுற வளைந்துவரும் பீடு – ஒரு
பாவையவள் மார்பதனை
மேவுசிறு மென்றுகிலை – ஒக்கும்
உளம் சொக்கும்.

பசுமைநிறப் பரியுடையோன் மாலை – வண்ணப்
படம்வரைந்து காட்டுகின்ற காலை – தமிழ்ப்
பண்ணமைதிப் பொன்னியவள்
நண்ணுகின்ற வண்ணமணப் – பெண்ணோ?
எழிற் கண்ணோ?

ஊரமைதி கொண்டிருக்கும் நேரம் – மதி
ஊர்ந்துவரும் காவிரியின் ஓரம் – இவ்
வுலகமெலாம் அமுதமதில்
ஊறிநிற்க இன்பமது – பாயும்
துயர் தேயும்!

சீரமைந்த பேறதுவாம் வீடு – அதைச்
சேர்வதுதான் உயிரினத்தின் பாடு – அச்
செல்வமதைக் கூட்டுவிக்கும்
செல்வியவள் காவிரிதான் – வாழி
பல ஊழி!

மருத்துவம்:

உணவுக்குழல் புற்றுநோய்

அ. பொன்னம்பலம்.

புற்றுநோய் மிகுதியான அளவில் பற்றும் உறுப்புகளில் தலைப் பட்டு நிற்பது உணவுக்குழல் ஆகும். (Cancer of Oesophagus). உணவுப்பாட்டை உறுப்புகளில் உணவுக் குழல் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருப்பதால் புற்று நோயின் தொடக்கக் காலத்தில் இந்த நோயின் அறிகுறிகளைப் பற்றிய தெளிவான அறிவு மக்கள் கொண்டு இருப்பது மிகவும் இன்றியமையாததாகும். எனவே இந்நோயின் தன்மைகளைப் பற்றியும், மருத்துவ முறைகளைப் பற்றியும் ஈண்டுச் சுருக்கமாகக் காணுவோம்.

இந்நோய் யாரைத்தாக்கும்?: பால் வேறுபாடின்றி இந்நோயானது ஆண், பெண், இருபாலாரையும் ஒத்த அளவில் பற்றும் தன்மை பெற்றுள்ளது. உணவுக் குழல் புற்றுநோயின் காரணங்களைப் பற்றி விரிவான ஆய்வு நிகழ்த்திய மருத்துவத்துறை ஆய்வு வல்லுநர்கள், மதுவை மிகுதியான அளவில் பருகும் மக்களில் பெரும் பான்மையோர் உணவுக் குழல் புற்று நோய்க்கு ஆளாகின்றனர் எனக் கணக்கிட்டுள்ளனர். என்வே, இவர்கள், மதுவருந்துதலும் இந்நோய்க்கு ஒரு காரணமாகக் கூடுமென ஐயுறுகின்றனர்.

உணவுக்குழலின் எப்பகுதியைத்தாக்கும்?: பெரும்பான்மையாக உணவுக்குழல் புற்றுநோய் உணவுக் குழலின் அடிப் பகுதியைத்தான் மிகுதியான அளவில் பற்றும்; ஏனென்றால் ஈண்டுதான் உணவுக் குழலின் குறுக்கு வளையமானது மிகவும் சிறுத்து இருப்பதன் காரணமாக, கடினமான உணவுப்பொருள்களை விழுங்கும்பொழுது இப் பகுதியிலுள்ள சவ்வுப்பகுதியை மெல்ல அரித்து, புற்றுநோய்த் தோற்றத்திற்குப் பாட்டையை அமைக்கின்றது. சில அமையங்களில் உணவுக்குழலின் மேற்பகுதியையும் தாக்கும். ஆனால் இப்பகுதியில் ஏற்படும் புற்றுநோயானது, தொண்டைப் பாகத்திலிருந்து இடம் பெயர்ந்து பரவுந் தன்மையதாகத்தான் பெரும்பாலும் இருக்கக்கூடும்.

இந்நோயின் அறிகுறிகள் யாவை?: இந்நோயின் தொடக்கப் பகுதியில் ஏற்படும் முதல் சிக்கலானது உணவை விழுங்கும் பொழுது உணவுக்குழல் பகுதியில் ஏற்படும் வலியாகும் (Dysphagia).

எளியதாகத் தொடங்கும் இவ்வலியானது, சில கிழமைகள் சென்றபின் மிகுதியாகிக்கொண்டே செல்லும்; பிணியாளன் இத் தன்மையான வலியை, உணவை நன்றாக மென்று விழுங்குவதன் மூலமாகவும், உணவின் பொழுது அடிக்கடி நீர் பருகுவதன் மூலமாகவும் ஈடு செய்ய முயல்வான். ஆனால் இந்நோய் பற்றி நான்கு அல்லது ஐந்து திங்கள் ஆனபின்னர் உணவு உணவுக் குழலின் வழியாக இரைப்பையை அடைய மறுத்து மறுபடியும் வாய்ப்பகுதிக்கே திரும்பும் இடர் நிலையை அடைவான். இத்தகைய இடர் நிலையின்பொழுதுதான் பிணியாளன் மருத்துவரின் உதவியை நாடத்தொடங்குவான். மேலும், உணவுக் குழலின்எப்பகுதியைப் புற்றுநோய் தாக்குகிறதோ அதன் தன்மையைப் பொறுத்தும் சிலவகையான அறிகுறிகள் தோன்றக்கூடும். உணவுக் குழலின் மேற்பகுதியானது புற்றுநோயினால் பற்றப்பட்டால் உணவு உண்டஉடனே மிக்க வலிவுடன் உணவு உணவுக் குழலினின்று வாய் வழியாக வெளியேற்றப்படும். உணவுக் குழலின் நடுப்பகுதி தாக்கப் பட்டால் உணவு உண்ட சிலமணி நேரத்தில் எளிதாக உணவு வெளித் தள்ளப்படும். சிலபொழுது உணவுக் குழலானது நன்கு விரிவடையக் கூடும்; இத்தகைய நிலையில் உண்ட உணவானது இரண்டு அல்லது மூன்று மணி காலம் கழித்து விரைவின்றி வெளியே தள்ளப்படும். உணவுக் குழலினின்று வெளித்தள்ளப்படும் உணவுப் பொருள்களில் சில பொழுது குறைந்த அளவோ அல்லது மிகுந்த அளவோ குருதியும் கலந்து இருக்கும்.

உண்ணும் உணவுப் பொருள்கள், இவ்வாறு இரைப்பையை அடைய இயலாநிலை ஏற்படுவதன் காரணமாகப் பிணியாளன் தன்னுடைய அன்றாடத் தேவையை ஈடு செய்யும் அளவுள்ள சாரப் பொருள்களைப் பெறமுடியாத இடர் நிலையை அடைகின்றான். இதன் காரணமாக அவன் உடலின் எடையானது நாளுக்குநாள் குறையத் தொடங்குகிறது. இந்நோயின் தொடக்கக் காலங்களில் நல்ல பசி உணர்வு (Appetite) இருப்பினும், உணவு உண்ணுங்கால் ஏற்படும் வலியின் காரணமாக உணவு உண்ண இயலாநிலையை எய்கின்றான். மிகவும் நாள்பட்ட நிலையில் “குரல்வளை நாண்கள்” (Vocal cords) செயலற்றுப் போய்விடுவதுண்டு.

மருத்துவர்கள் எவ்வாறு நோய்நாடுகிறுர்கள்?: உணவுக்குழல் புற்று நோயை நாட (Diagnosis) மருத்துவர்கள் புதிர்க்கதிர்ப் படப்பிடிப்பு முறையைப் (Radio graphy) பயன்படுத்துகின்றனர். பேரியம் கலந்த உணவுக் குழம்பைப் பிணியாளனுக்கு அளித்துவிட்டுப் புதிர்க்கதிர்க் கருவியின் மூலமாக உணவுக்குழல் பகுதியை மிகவும் தெளிவாகப் படம் பிடித்து விடுகின்றனர். இத்தகைய படத்தின் துணைகொண்டு உணவுக்குழல் எப்பகுதியில் குறுக்கம் (Stricture) அடைந்துள்ளது, எப்பகுதியில் குழிப்புண் (Ulcer) ஏற்பட்டுள்ளது என்பவை பற்றிய தெளிவான அறிவு பெறுவர். சிலகால் உணவுக்குழலின் உட்பகுதியை நேரிடையாக ஆய, ''உணவுக்குழல் நோக்கி'' (Oesophagos cope) என்ற கருவியைப் பயன்படுத்துவர் நோய் நன்கு முற்றிய நிலையில், கழுத்துப்புற பகுதியிலுள்ள நிணநீர்க் கணுக்களும், மார்புப்பகுதியில் உள்ள நிணநீர்க் கணுக்களும் வீங்கிக் காட்சியளிக்கும்.

எவ்வாறு பிணி தீர்க்கின்றனர்?: இந்நோயின் தொடக்கப் பகுதியிலேயே இந்நோயை நாட இயலாதநிலையில் இருப்பதன் காரணமாகப், பெரும் பான்மையான உணவுக்குழல் புற்றுநோயை முழுமையாக நலப்படுத்த இயலாத நிலையை அடைகின்றனர். புற்றுநோயை நலப்படுத்துவதில் அறுவை மறுத்துவமானது (SURGERY) முதல் இடத்தைப் பெறுகிறது. புற்றுநோயினுல் பற்றப்பட்ட உணவுக்குழலின் பகுதியை அகற்றி விட்டுத் தோலினுல் ஆக்கப்பட்ட சிலவகையான செயற்கைக் குழல்களின் மூலமாக இரைப்பையைத் தொண்டையுடன் இணைத்து விடுகின்றனர்.

உணவுக்குழல் புற்றுநோயை நலப்படுத்த மற்ருெருமுறை கதிரியக்க மருத்துவ முறையாகும் (RADIO THERAPY); புதிர்க்கதிர்களைப் புற்றுநோயினுல் பற்றப்பட்ட பகுதிகளில் ஆழ்ந்து பாய்ச்சுவதின் மூலம் புற்றுநோய் திசுக்களின் வன் தன்மையை ஓரளவு குறைக்கின்றனர். ஆனுல் அறுவை மருத்துவத்தைப் போல் இத்தகைய முறையானது வேண்டிய பலனை அளிப்பதில்லை. புற்றுநோயின் மருத்துவ முறை இன்னும் ஆய்வுக்கு உரிய பொருளாகவே இருக்கிறது. மிகவும் அண்மைய எதிர்காலத்தில் சிறந்த மருத்துவ முறைகளை நாம் எதிர்பார்க்கலாம்.

எங்கே தமிழுணர்வு ?

—தரங்கை. பன்னீர்ச்செல்வன்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர்க்கு அடிப்படைக் கல்வியைத் தக்காங்கு புகட்டும் தலையாய பணியை மேற்கொண்டு உள்ளன, தமிழகத் தொடக்கப் பள்ளிகள்! எனினும் உண்மை நிலை நேர்மாறானது. பெரும்பான்மையான பள்ளிகட்குச் சென்றால் நாம் தமிழர் பள்ளிகளில்தாம் இருக்கின்றோமா? என்னும் ஐயம் எழுகின்றது. தமிழ் நம் தாய்மொழியாயிற்றே என்னும் உணர்வு அணுவுமில்லார் — எங்கேயோ இருந்துகொண்டு எதையெதையோ கிறுக்கிக்கொண்டு எப்படியாவது ஊதியம் பெற்றால் போதும் என எண்ணிக்கொண்டிருப்பவர்களின் கூட்டம் பள்ளியாசிரியர்களிடையே கலந்துகொண்டிருப்பதால், அறியாக் குழவிகளின் பிஞ்சு நெஞ்சங்களில் தமிழ் உணர்வு ஊன்றப்படுவதேயில்லை.

ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் பணத்தையும் பரிந்துரைகளையும் காட்டித், தொடக்கப்பள்ளித் தொண்டுகளுக்குச் சிறிதும் தகவற்றவர் களெல்லாரும் சேர்ந்து விடுகின்றனர். அவ்வாசிரியர்பயிற்சிப்பள்ளி களிலும் ஆசிரியர்களை — அதாவது தமிழ்ப் பள்ளிகளில் தமிழ்க்குழவி கட்குத் தமிழறிவூட்டும் ஆசிரியர்களை உருவாக்குவது கிடையாது. ஐந்து வரிகள்கூட நம் அன்னைமொழியில் இலக்கணப் பிழையின்றி எழுதத் தெரியாதவர்களெல்லாரும் ஆசிரியர் சான்றிதழைப் பெற்று விடுகின்றனர். அத்தகையார் தமிழறிவுக் குறைவினால்தான் ஐந்து ஆண்டுகளே ஆங்கிலம் அல்லது இந்தி பயின்றவனுடைய மொழி அறிவைவிடப் பதினோராண்டுகள் தமிழ் பயின்றவனுடைய மொழி அறிவு தாழ்ந்த நிலையில் உள்ளது.

தமிழின் சீர்மை உணர்த்தப் பெறாத தொடக்கப்பள்ளி (பெரும் பான்மை) ஆசிரியர்கள் மட்டும், தமிழுணர்வற்ற மாணவ நெஞ்சங் களுக்குப் பொறுப்பல்லர். உயர்பள்ளி ஆசிரியர்களும் — அதிலும் குறிப்பாகத் தலைமையாசிரியர்களும் தமிழாசிரியர்களும் பொறுப்பு உடையவர்களே! ஏனெனில் இளமையில் தரப்படும் எழுநிலைப்படிப்பில் (Elementary) ஏற்படும் குறைகள் எத்துணைத்தாயினும், உயர்நிலை படிப்பில் கவனமுடன் இருப்பின் அவற்றைக் களைந்துவிட முடியும் ஆனால் பெரும்பள்ளி இறுதிச்சான்றிதழில் ஆங்கிலத்தில் கையொப்பம் இடாத மாணவர்களைத் "தறிதலைகள்" என்றும், "உருப்படமாட்டார்கள்" என்றும் திட்டக்கூடிய தலைமையாசிரியர்களிடமும், அதனைக்கண்டும் காணாமல் இருப்பதோடு தாமே ஆங்கிலத்தில் கையொப்பமிடும் தமிழ்ப் பற்றாளர்களாகிய தமிழாசிரியர்களிடமும் பயிலும் மாணவ நெஞ்சங்கள் எங்ஙனம் தமிழுணர்வுடன் விளங்க முடியும்?

கடமைக்கு மாரடிக்கும் உயர்நிலைக் கணக்காயர் ஒருசிலர் மட்டும் தமிழுணர்வு குன்றியமைக்குப் பொறுப்பல்லர். ஆங்கிலத்தில் தந்தையின் தலைப்பெழுத்தை எழுதத் தாம் கற்றுக்கொண்டதையே பெருமையாகக் கருதிக்கொண்டு, தம் மைந்தன் முழுமையும் கோணலெழுத்தில் [ஆங்கிலம்] கையொப்பமிடுவதை மிகப் பெருமையாகக் கொள்ளக் கூடிய பெற்றோரும் பொறுப்புடையராவர். ஏனெனில், தாம் நிறைவேற்றியதைவிட [சாதனை] மிகுதியாகத் தம்மக்கள் செய்தல் வேண்டும்; புகழுற வேண்டும் என்னும் நன்னோக்கத்தால் (!) மொழிப் பற்றே பொதுமக்கள் நெஞ்சில் எழுவதைக் காணமுடியவில்லை.

'நம்மகன் புதியமொழியில் வல்லவனானன்' என உள்ளூற மகிழ்வெய்தி, உயர்தனிச் செம்மொழியாம் தமிழை—தாய்மொழியை (அறியாமல்) மதிக்காத பெற்றோர் மட்டும் தமிழுணர்வற்ற நெஞ்சிற்குப் பொறுப்பல்லர். தமிழை ஆட்சிமொழியாக்கி விட்டதாகக் கூறிக் கொண்டு அரசிதழை [GAZETTE] ஆங்கிலத்தில் வெளியிடும் அரசினரும் இதற்கு மிகப் பொறுப்பாவர். தமிழில் வல்லவர்க்குத்தான் எத்துறையிலும் முதலிடம் எனச் சட்டம் செய்யும் திண்மை இவ்வரசுக்கில்லாதது தமிழுக்கும், தமிழர்க்கும் மிகப்பெரிய கேடாகும்.

தாய்மொழியைப் பிழையற உணராதவன்—தாய்மொழிப்பற்றுச் சிறிதுமில்லாதவன் விடுதலை நெஞ்சினனாகத் தலைநிமிர்ந்து வாழ வியலாது என்பது வரலாறு கண்ட—ஆனால் மறைக்கப்பட்ட உண்மை. கலம் கசடுற்றால் அதனைத் தேய்த்துத் தூய்மை ஆக்கிடல் போல், பண்டு உலகப்பேரொளியாக விளங்கிய தமிழர் குமுகாயத்தை மீண்டும் தன்னொளித் துலக்கம் பெறச் செய்வது கடனன்றோ?

எனவே, அன்போடு எச்சரிக்கின்றேன்:-

தமிழறியாதவர்களே, ஆசிரியர்ப் பயிற்சிக்குப் போகாதீர்கள்!

தமிழறிந்தவர்களே, கடமைக்கு மாரடிக்காதீர்கள்!!

பெற்றோர்களே, நீங்கள் பாலோடு ஊட்டிக் கொடுத்த தமிழை உங்கள் மக்களைக் கொண்டே மதிப்பிழக்கச் செய்யாதீர்கள்! தமிழகத்தை ஆள்வோரே, உங்கள் நாட்டை உணர்வுள்ள தமிழ் நாடாக்குங்கள்! இன்றேல் பண்போடு ஒதுங்கிக் கொள்ளுங்கள்! தழைக்க தமிழுணர்வு! O

முன் இதழ்த் தொடர்ச்சி.

பேதைமையுள் பேதைமை

— தமிழவேள்.

தமிழ் இலக்கியங்களைப்பற்றி அறிய வேண்டும் என்ற ஆவலில் இளைஞர்கள் சிலர் ஒன்றுகூடி, " இலக்கியப் பேரவை " என்னும் பெயரில் சென்ற ஆண்டு ஒரு மன்றத்தைத் தொடங்கினார்கள். அந்த மன்றத்தின் தொடக்க விழாவில் பேசுவதற்கென்று, வந்திருந்தவர் களில், புலவர் பட்டம் பெற்று, அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி யில் பயிற்சி பெற்று வந்த இளைஞரும் ஒருவராவார். அந்த இளைஞரை அறிமுகப்படுத்திய பொழுது, "இவர் ஒரு தமிழ்க் குடும் பத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தை ஒரு தமிழ்ப் பெரும் புலவர். கல் வெட்டு ஆராய்ச்சி செய்து நூல் எழுதியிருப்பவர். இவருடைய அண்ணாவும் ஒரு புலவர். இவரும் ஒரு புலவர்" என்று பாராட்டிக் கூறினார்கள். அந்த இளைஞர் எழுந்து பேசிய பொழுது சொன்னார்- "இன்று தமிழ் இலக்கியங்களை யாரும் சரிவரக் கற்பதில்லை அரைத்த மாவையே அரைப்பதுபோல் ஏதோ சில பாடல்களை மட்டும் தெரிந்து வைத்துக் கொண்டு திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். தமிழ்ப் புலவர்களாக இருப்பவர்களுக்கும் கூடத் தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை இருப்பதில்லை. புலவர் பட்டம் பெறுவதற்குப் பாடமாக வரு கின்ற பாடல்களைத்தவிர மற்றவற்றை அவர்கள் படிப்பதே இல்லை! 'புறநானூற்றில் 201 முதல் 400 பாடல்கள் வரை புலவர் வகுப்புக்குப் பாடமாக வருகிறது என்றால், அந்தப் பாடல்களை மட்டும் படிக்கிறார் களே தவிர 401 ஆவது பாடலை அவர்கள் படிப்பதுமில்லை, பார்ப்பது மில்லை" என்றார். புறநானூறு என்ற பெயரே அந்த நூல் நானூறு பாடல்களின் தொகுப்பு என்பதைத் தெரிவிக்கிறது. புறநானூற்றில் நானூறு பாடல்களுக்குமேல் 401 ஆம் பாடல் என்று ஒன்று இல்லவே இல்லை. அந்த நானூறு பாடல்களிலும் இரண்டொரு பாடல்கள் இன்று கிடைக்கவில்லை என்று இடையில் பாடல் இல்லாமல் பாடலின் எண்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவ்வாறிருக்க ஒரு தமிழ்ப்புலவர், 401ஆவது பாடலை மற்றவர் படிப்பதில்லை என்று குறைகூறுகிறார் என்றால் அவர் தம் பேதைமையைக் கண்டு வருந் தாமல் இருக்க முடியவில்லை!

திருக்குறளின் பெருமையை அறிவதில் மக்கள் காட்டிவரும் ஆர்வத்தை வேறுபக்கம் திருப்பிவிட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு, ஒரு பண்டாரம் விடுத்த வேண்டுகோளின்படி, திருப்பாவை-திருவெம்பாவை மாநாடுகளும், விழாக்களும் ஆங்காங்கே இப்பொழுது நடைபெற்று வருகின்றன அல்லவா? அத்தகைய விழா ஒன்றில் 'தமிழறிஞர்' என்று சொல்லப்படும் ஒருவர் சொற் பெருக்காற்ற வந்திருந்தார். அவர் "திருப்பாவையையும் திருவெம்பாவையையும் வேதத்தின் இரு கண்கள்" என்று கூறியதோடு "வேதம் என்பது வடநாட்டுக்கு மட்டும் உரியதன்று. தென்னாட்டுக்கும் உரியது; இதை என்னால் மெய்ப்பிக்க முடியும்" என்று சொல்லிப் பரிபாடல் திரட்டிலிருந்து ஒரு பாடலை எடுத்துக்காட்டி விளக்கினார். மதுரையைச் சேர்ந்த புலவர் ஒருவர் சொல்வதாக அமைந்துள்ள அந்தப் பாடலில், உறையூரிலும் வஞ்சியிலும் உள்ள மக்கள் கோழி கூவுவதைக் கேட்டுத் துயில் எழுவதைப்போல மதுரையில் உள்ள மக்கள் துயில் எழுவதில்லை. பூவினில் பிறந்தவனாகிய நான்முகனுடைய நாவினில் பிறந்த நான் மறைகளை ஓதுவோரின் குரலைக்கேட்டே அவர்கள் கண் விழித்து எழுகிறார்கள்" என்ற கருத்துப்படச் சில வரிகள் உள்ளன.

"பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான் மறைக் கேள்வி நவில் குரல் எடுப்ப
ஏம வின்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே"

— பரிபாடற்றிரட்டு 7.

என்னும் அந்த வரிகளைக் கூறி, இதிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தமிழ் நாட்டில் வேதம் ஓதப்பட்டு வந்தது தெரியவில்லையா? ஆகவே வேதங்கள் வடமொழியில் இருந்தாலும் அவை தமிழ் நாட்டுக்கும் உரியவையே" என்றார், அந்தத் தமிழறிஞர். பர். உ. வே. சாமிநாதரின் மாணவரான அவர், "இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நடையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர் 'கல்கி'தான். இன்றைய தமிழ் எழுத்தாளர்களின் நடையெல்லாம் கல்கியின் நடைதான்" என்று ஏற்கனவே பேசியிருப்பவர். அவர் வடமொழி வேதத்தைத் தமிழ்நாட்டுக்கும் உரியது என்று சொல்லிய

தில் வியப்பொன்றுமில்லை. அவர் அப்படித்தான் சொல்லுவார். ஆனால் அதைக் கேட்கின்ற தமிழர்கள் எண்ணிப்பாராமல் நம்புகிறார்களே; அவர் சொல்லியது சரியென்று கொள்கிறார்களே; அவர்கள் நிலையை எண்ணித்தான் இரங்கவேண்டியிருக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்த தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்னும் மூன்று நாடுகளும் சேர்ந்ததே ஆகும். பாண்டியநாட்டின் தலைநகரம் மதுரை. சோழநாட்டின் தலை நகரம் கோழியூர் என்னும் உறையூர். சேரநாட்டின் தலைநகரம் வஞ்சி. மேற்கண்ட பரிபாடலிலிருந்து பாண்டியநாட்டுத் தலைநகரமாகிய மதுரையில் மட்டும்தான் வடமொழி நான்மறை ஓதப்பட்டு வந்தது என்று தெரிகிறது. சேரநாட்டிலும் சோழநாட்டிலும் அது ஓதப்பட வில்லை என்றும் தெரிகிறது. அதாவது தமிழகத்தின் ஒரு பெரும் பகுதியில் மட்டுமே வடமொழி வேதம் படிக்கப்பட்டது என்றால் என்ன பொருள்? அப்பொழுதுதான் அந்த வடமொழியாளர்கள் தமிழகத்தில் கால் எடுத்து வைத்திருக்கிறார்கள் என்றுதானே பொருள்? "உறை யூரிலும் வஞ்சியிலும் உள்ள மக்களைப்போலத்தான் மதுரையிலுள்ள மக்களாகிய நாங்களும் பன்னெடுங்காலமாகக் கோழி கூவுவதைக் கேட்டு கண் விழித்துக் கொண்டிருந்தோம். ஆனால் இந்த வடமொழி யாளர்கள் வந்து சேர்ந்த பிறகுதான் அவர்கள் வேதம் ஓதுவதாகச் சொல்லி எழுப்புகின்ற வரட்டுக் கூச்சலைக்கேட்டு நாங்கள் கண்விழிக் கிறோம். அவர்கள் இடுகின்ற அந்தக் கூச்சலில் கோழி கூவுவதும் எங்களுக்குக் கேட்பதில்லை" என்ற உண்மையைத் தானே அந்தப் பாடல் தன் உள்ளுறையாகக் கொண்டிருக்கிறது? மேலும் பரிபாடல் என்பது எட்டுத்தொகையில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருப்பினும், கழக இலக்கியங்களிலேயே அது மிகவும் பிற்பட்டதாகும். கடவுளைப்பற்றிய புரட்டுக்கதைகள் மலிந்த பாடல்களின் தொகுப்பாகும். திருமாலையும் செவ்வேளையும் வையையும்பற்றிய பாடல்களின் திரட்டாகும். அத் தகைய ஒரு நூலில் வேதம் ஓதுவது பற்றி வருகிறது என்பதைக் கொண்டு வேதம் தமிழகத்துக்கும் உரியது, இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே இங்கு வழங்கிவந்தது என்று கூறுவது சரியாகுமா? அதைச் சரியென்று தமிழன் நம்பலாமா? கேழ்வரகில் நெய் ஒழுகு கிறது என்றால் அதைக்கேட்டு நம்புகின்றவனாகத் தமிழன் இன்னமும் இருந்துவரலாமா?

முன்னுல் ஒரு கட்சியில் இருந்தபொழுது தமிழே தன் மூச்சு என்று சொல்லிக்கொண்டிருந்த திரைப்படப் பாவலர் (?) ஒருவர், இப்பொழுது வேறொரு கட்சியில் சேர்ந்துவிட்டதால் அந்த மூச்சை விட்டுவிட்டுப் பேசிவருவது நாடறிந்த செய்திதான். அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் தான் சார்ந்துள்ள கட்சியின் கொள்கைகளைக் கண்மூடிப் போற்ற வில்லை என்ற காரணத்துக்காக, ஓரளவு தனித்தமிழில் செய்திகளை வெளியிடுகின்ற ஒருநாளிதழைத் தாக்கிப்பேசினுர். அப்போது அவர் தனித்தமிழையும் பிறமொழிச் சொற்களைத் தமிழ் வழக்குப்படி எழுது வதையும்கூட எள்ளி நகையாடினுர். 'ரப்பர்' என்பதை "இரப்பர்" என்று அந்த நாளிதழ் எழுதுகிறது. இரப்பர் என்ருல், பிச்சை யெடுப்பவன் என்று பொருள். 'ரப்பர்' என்ற ஆங்கிலச் சொல்லை அப்படியே எழுதினுல் என்ன? அதற்கு முன்னுல் ஒரு 'இ'யைச் சேர்த்து அதை ஏன் பிச்சையெடுப்பதாகச் செய்யவேண்டும்?" என்று கேட்டார். பிறமொழிச் சொற்களை எடுத்தாளுகின்றபோது அவற்றை நம் மொழியின் ஒலிக்கும் வழக்குக்கும் ஏற்ப எழுதுவது தானே முறை? இரந்து கேட்பவரை 'இரப்போர்' அல்லது 'இரப்பவர்' என்று தானே சொல்கிருேம்? இரப்பவரை 'இரப்பர்' என்று சொல்லுவதாகவே இருந்தாலும் அந்தச் சொல் கையாளப்படுகின்ற இடத்தை நோக்கிப் பொருள் தெரிந்து கொள்ளக்கூடாதா? "இரப்பர்த் தொழிற்சாலை" என்ருல் இரந்துண்டு வாழ்பவர்கள் தொழில் செய்யும் இடம் என்று யாராவது நினைத்துக்கொள்வார்களா? ஏதோ ஒன்றை - யாரோ ஒருவ ரைத் தமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காகத் தமிழையும் தமிழ் வழக் கையுமா எள்ளி நகையாடுவது? இப்படிப்பட்டவர்களால் தமிழ் வளருமா? தேயுமா?

இவ்வாறு தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு தமிழ் நூல்களில் இல்லாத அரிய கருத்துகள் சமற்கிருத நூல்ககளில் இருப்பதாகக் கூறுபவர்களும், தமிழ் இலக்கியங்களைப் படிக்காமலே அவற்றைக் குறைகூறி எழுதுபவர்களும், புலமைபெருமல் புலவர் பட்டத்தைமட்டுமே பிதற்றித் திரிபவர்களும், தமிழாலேயே பிழைப்பை நடத்திக்கொண்டு தமிழையும் தமிழ்மொழி வழக்கையும் எள்ளி நகை யாடுபவர்களும், தமிழ்ப்பகைவர்களின் கரவான கூற்றுகளை எண் ணிப்பாராமல் நம்புகின்றவர்களும் ஆகச் சேர்ந்து ஒருபுறம் தமிழைத் தாழ்த்திவர, "சமற்கிருதத்தில் பொறியியல் நுணுக்கங்கள் உள்ளன;

ஆகவே சமற்கிருததததைம் படிக்கவேண்டும். நாம் எல்லாரும் இந்தியர்கள்; ஆகவே இந்தியைப் படிக்கவேண்டும்'' என்று சொல்லி, தமிழ் வளர்ச்சியிலும் பிறமொழி வளர்ச்சியிலேயே நாட்டம் செலுத்தி வரும் ஆட்சியாளர்கள் மற்றெருபுறம் தமிழைப் புறக்கணித்து வருகின்ற நிலைமைகளையெல்லாம் உண்மைத் தமிழ்ப்பற்று உடையவர்கள் நன்கு அறியவேண்டும். தமிழர்கள் சிலரிடம் உள்ள இந்தப் பேதைமையுள் பேதைமையானது, எவ்வாறெல்லாம் கேள்போல் பகைவர்கள் செய்கின்ற செயல்களுக்குத் துணை நிற்கிறது என்பதைக் காணவேண்டும். கண்டு, கேள்போல் பகையோடு பேதைமையுள் பேதைமையையும் சேர்த்து அகற்றுகின்ற வகையில் செயற்படவேண்டும். O

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்ருெழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனுல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு;

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:

'கோ' பணையபுரம்.

அடமடை கட்டுதல் – கிளர்ச்சிக்காரர்களை அமைதிப்படுத்தல்.
அம்பாரம் – ஒக்கத்தட்டிய குவியல்.
அடாவடி – தகாதது.
இசும்பு – வாரிசு, வழித்தோன்றல்.
இதவு – இளஞ்சூடு.
இலசாடு புசாடு – சொதசொதவென்றிருத்தல்.
இலுப்புதல் – துழாவுதல்.
ஈச்சிபாச்சியின்றி – வகைதொகையின்றி.
உத்தி – விளையாட்டில் ஓர் இணை.
உபரி – பெருக்கம்.
குந்தகம் – ஊனம்.
ஊர்ப்பட்ட – கணிசமாக - மிகுதியாக, ஏகப்பட்ட.
ஊரணி – மகளிரிடும் ஒருவகைப் பொங்கல்.
எடால் – பருத்துயர்ந்த (Gigantic) மாந்தனைக் குறிப்பது.
எத்து – நயமுறப்பேசுதல்.
எந்துதல் – அறைதல்.
எம்புதல் – நெம்புதல்.
ஏருமடைக்குத் தண்ணீர் கட்டுதல் – முரணுதல்.
ஒண்ட – அண்ட.
ஒற்றடம் – வெம்மைப்பட ஒற்றுகை.

ஒக்காளம் – வாந்தி.
ஓரம் – நடுநிலையின்மை, ஒருபக்கமாயிருந்தல்.
க்சம் – அழுக்கு.
கம்பத்தம் – பெருநிலக்கிழார் வீடு.
கலிங்கல் – சிறு மதகு.
கறுவுதல் – சினத்தொடு நோக்கல்.
காண்டு – வெறுப்பாலாய சினம்.
காதை – பேரவா.
காந்தல் – தீய்ந்த அடிக்கூழ்.
காப்புக்காய்த்தல் – மரத்துப்போதல்.
கித்தான் – கோணி, சாக்கு.
குளிகுளித்தல் – மகவு ஈனல்.
குறக்கல் – விரலில் ஏற்படும் ஒருவகை இழுப்பு.
கூச்சம்நாச்சம் – நாணம்.
கொத்தை – வெற்றிலைப்பாக்குத் திரளை.
கொந்துதல் – துன்புறுத்தல்.
கிடேறி – பசு.
கேன – கேடுகெட்ட,
கெலிப்பு – வெற்றி.
கோடி – ஏரியின் பெருவாய்க்கால், புது ஆடை, பிணத்தின் மேலிடும் துணி.
சங்கை – ஆபாசம்.
சங்கைவாங்கி – மானமற்றவன், ஆபாசபேச்சுகளை வாங்கியவன்.
சடங்கானாள் – சமைந்தாள், பெண்ணானாள், பூப்பெய்தினாள், பருவமுற்றாள்.
சப்பை – நரம்பு – மெலிந்தவனைக் குறிப்பது.
சரவம் – கடவுட் படிவம்வைத்து ஊர்வலம் வரும் கேடயம்.
சிலிர்த்தல் – பருப்பு வேகாது சிறிதாகிவிடல்.
சீமித்தல் – சீர்கெடல்.
செனுறுதல் – முறையின்றி உண்ணல்.
செண்டிப்பு – செழுமை.
சேங்கண் – பழுப்புநிற மாடு.
சேடை – அழகிய கொடி, சேர்த்துழும் உழவு.
சூல் வளைவி – வளைகாப்பு.
தமுக்கு – சிறு முரசு.

திப்பி – அடிக்கப்பி.
தீம்பு – தீங்கு.
துக்கடா – (அற்பன்) எளியவன்.
தோரணை – தோது, நிலை.
நிகரம் – உறுதி.
நொப்புநுரை – நொதிக்கும் நுரை.
நொள்ளைமடையான் – கொக்கினப்பறவை.
நொறுவு – மாலைச்சிற்றுண்டி.
நோட்டம் – ஒரேபொருளில் நாட்டம்.
பட்டரை – சீருறச்செய்த குவியல்.
பிக்கல் பிடுங்கல் – நிலைக்குமீறிய துன்பம்.
பின்வாய், முன்வாய் – நெல்லுக்கும் பதருக்கும் பின், முன் உள்ள நெல்.
புடைவைத்தல் – சீழ்பிடித்து வீங்கிவிடல்.
புரையோடல் – மரம் உள்ளீடு அற்றுப்போதல்.
முக்கட்டை – மூடன், முண்டம்.
முடியாமல்கிடத்தல் – நோய்வாய்பட்டிருத்தல்.
மொக்கை – மூக்குடைப்பு, சிறுபொக்கை.
முணர் – ஒருவாய் நீர்.
வக்கா – வெண்ணிறப்புள்.
வக்கணையாக – சுவையாக, (நடுநிலையாக ஆராய்ந்து பேசுதல்.)
வட்டு – முட்டிவரை கட்டும் உடை.
வட்டித்தல் – பரிமாறுதல்.
வலித்தல் – இழுத்தல் (Stringing)
வழக்கம் – ஈகையுடைமை.
வாரம் – விளைவில் ஒரு பகுதியை நிலக்கிழாருக்குக் கொடுத்தல்.
வாமுட்டு – கையூட்டு.
வார்க்கோல் – விலக்குமாறு, ஆயிரங்குச்சி துடைப்பம்.
வானவாரிப்பயிர் – மழையை நம்பியிடும் பயிர்.
விட்டம் – சிற்றுடை.
விரிகட்டுதல் – சக்கைபோடச் சாத்துதல்.
வெக்குதல் – ஏங்குதல்.
வேடு – வேகவைக்கவேண்டிய பொருளை வைத்துள்ள துணி.
வேடுதம் – வேகவைத்த பொருள்களிலிருந்து வரும் ஒருவகை மணம்.
வேசாரால் – அசதி (Tired.)

நூற்சுருக்கம்

தொடர் இரண்டு

உலகின் முதற் செம்மொழி

(The primary classical language of the world)

மொழிநூற் பேரறிஞர் பண்டித. புலவ, கலைத்தலைவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

இலெமூரியாவே, தமிழரின் பிறந்தகம் :

அகச்சான்றுகள் : சிலப்பதிகாரத்தில் மூழ்கிய குமரிமலைபற்றிப் பேசப்பட்டுள்ளமை, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரையில், மூழ்கிய பரந்த நிலப்பரப்பைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளமை. பாண்டியரே முதலில் தோன்றியவரென்றும், சேர சோழர் அவர்தம் வழித்தோன்றல்கள் என்றும், அவர்கள் வடக்கு நோக்கிச் சென்று தங்கள் அரசை அமைத்துக்கொண்டனர் என்றும் கூறப்படும் வழக்காறு. புறநானூற்றில் பஃறுளியாறு பாயும் குமரி நாட்டின் அரசனை நெடியோன் என்னும் பாண்டியனைப்பற்றிக் கூறியுள்ளமை.

தென்மொழி என்ற சொல்லே தமிழ் தென்னகத்துக்குரியது என்பதைக் காட்டும். மறைந்து வணக்கத்துக்குரியவராகிய தங்கள் முன்னோர்களைத் தென்புலத்தார் என்று தமிழர் குறிக்கின்றனர். தென்புலத்திலிருந்து மறைந்துபோனவர் அவர்கள் என்பதே கருத்தாம். இதுவும் தமிழனின் பழந்தாயகம் தென்புலமே – அதாவது இலெமூரியாவே என்பதற்குச் சான்றாம். இன்னும் நிலவுவதான "குறத்தி பிள்ளைபெறக் குறவன் மருந்துண்ணும்" பழக்கம் தென் ஆப்பிரிக்கா, இலெமூரியா நிலப்பரப்பில் முன்பு வழங்கிவந்த முந்தியற் பழக்கம் ஒன்றின் சாயலேயாகும்.

புறச்சான்றுகள்: மண்ணியல் ஆய்வுகளின்படி இந்தியப் பெருங் கடல் முன்பு நிலப்பரப்பாக இருந்த ஒன்று என்று கண்டுள்ளனர் சிலேத்தர் என்பார் 'தமிழர் தெற்கிருந்தே இந்தியாவுக்குள் வந்தனர்' என்று கூறுகின்றார். நிலைத்திணை, விலங்கியல் ஆய்வாளரும், இந்திய ஆப்பிரிக்க நிலைத்திணைகளும் விலங்குகளும் பலவகையில் ஒத்திருத்தல் கண்டு இரு நாடுகளும் நிலப்பரப்பால் பிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்றே கூறுகின்றனர். ஆத்திரேலியப் பழங்குடி மக்கட்கும் திராவிடருக்கும் நெருங்கிய ஒற்றுமை உள்ளமை கண்டிபிடிக்கப் பட்டுள்ளது. இந்திய மலைவாழ் மக்கட்கும் கிழக்கிந்தியத் தீவுகளில் வாழும் மக்கட்கும் பல பழம்பழக்க வழக்கங்களில் ஒற்றுமை உள்ளது. திராவிட மொழிக்குடும்பம் இந்தியப் பெருநிலப் பரப்பிலன்றி உலகின் பிறபகுதிகளிற் காணப்படவில்லை. அதோடு, திராவிட மொழிகள் தெற்கில் தூய்மையாகவும் வடக்கிற் செல்லச் செல்லத் தூய்மையிழந்தும் சிதைந்தும் வழங்குகின்றன. ஆதலின், திராவிட மொழிகளின் தோற்றம் உலகின் பிற எப்பகுதியினும் இல்லை என்றும், அஃது அழிந்துபோன தென்பெரு நிலமாகவே இருத்தல் வேண்டும் என்றும் முடிவு கட்டலாம்.

வடக்கிற் செல்லச் செல்லத் தமிழினச் சொற்கள் சிதைந்துள்ள வகை:

தமிழ்	பிராகுவி
வாய்	பா
மகார்	மார் (மகன்)
நீர்	தீர்
பால்	பால்த்
தேள்	தேள்த்
செய்	கே
இரண்டு	இரட்

தமிழ்	மால்த்தோ
அது	அத்
அவர்	ஓவார்
ஒரு	ஓர்த்
கண்	கானே

மூக்கு	மூன
பல்	பால
காது	கேது
மகள்	மொகி

தமிழகத்து மலைவாழ்மக்கள் முந்தியல் மக்களுமல்லர்; அவர்தம் மொழிகளும் முந்தியல் மொழிகளல்ல. அம்மக்கள் பிற்காலத்தில் தமிழக மருதநிலங்களிலிருந்து மலைநாடு சென்று குடியேறியவர்களே. அவர்கள் மொழியின் சொற்கள் பல தமிழ்ச்சொற்களின் சிதைவுகளே. ஆதலின் இம்மலை வாழ் மக்களே தமிழினத்துக்கு முதல்வராவர் என்ற கூற்றுப் பொருந்தாது.

தமிழின் உலகப் பொதுமை : யாதானும் ஒருவகையில் தமிழால் வளப்படுத்தப்பெறாத அல்லது தமிழின் செல்வாக்குக்குட்படாத பெரு மொழி ஒன்றேனும் உலகில் இல்லை எனலாம். ஆரிய, செமிதிக்கு, சிந்திய மொழிகட்கு மட்டுமல்லாது தமிழுக்கும் ஆத்திரேலிய ஆப் பிரிக்க மொழிகட்கும் நெருங்கிய தொடர்புண்டு. கால்டுவெல் இதனை எடுத்துக் காட்டியுள்ளார் :

திராவிடம்	**ஆத்திரேலியம்**
நான், யான், நா, என்.	ங்கா, ங்கை, ங்கத்சா.
நீன், நீ, நீம், நும்.	நின்ன, ங்கின்னெ, ங்கின்தோவா. நிங்தே! நிமெதூ, நூர, நீவ நூர்ல்
என்னை	எம்மோ

கானுவில் (ஆப்பிரிக்கா) தோகோலாந்துப் பகுதியிற் பேசப்படும் ஒரு மொழியில் வா, போ, தூக்கு, தேவி(இறைவி) ஆகிய சொற்கள் (அவை தமிழ்ச் சொற்கள் என்று அறியப்படாமலேயே) வழங்கிவரு வதாக கானு நாட்டைச் சேர்ந்த ஒருவர் சென்னை வந்த ஞான்று கூறியுள்ளார்.

பாண்டியர், சோழர் சேரர் மரபுகளின் தொடக்கம் : பாண்ட வரின் தந்தையான பாண்டு என்ற வடநாட்டரசனின் பெயரினின்றே பாண்டியன் என்ற பெயர் வந்திருக்கவேண்டும் என்பர். இது பொருந் தாது ஏனெனில் பாரதக் காலத்திலேயே மூவேந்தர் மரபு தழைத் தோங்கியிருந்தது. அவர்கள் பாரதப் போரிலும் கலந்துகொண்டனர்.

பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் வரலாறு இதனை விளக்கும். பாண்டி என்றால் காளை என்பது பொருள். வலிமைக்கும் விடா முயற்சிக்கும் பெயர்பெற்றதாகக் 'காளை' கருதப்பட்டதாலேயே, இளமறவரும் காளையர் என அழைக்கப்பட்டனர். பழந்தமிழர் வாழ்வில் 'காளை' மிக நெருங்கிய தொடர்புடையதாயிருந்தது. ஆதலின் காளையைக் குறிக்கும் 'பாண்டி' என்னுஞ் சொல்லினின்றே 'பாண்டி யன்' என்ற சொல் தோன்றியிருக்க வேண்டுமென்பதே பொருத்த மாகும். பழங்காலத்தில் அரசர்கள் தாம் கடவுளர் வழிவந்தவர்கள் எனக் கூறிக்கொள்வதிற் பெருமையடைந்தனர். பாண்டியர் திங்கட் குலத்தவர் என்றும், சோழர் ஞாயிற்றுக்குலத்தவர் என்றும் சேரர் அழற் குலத்தவர் என்றும் தங்களைக் கூறிக்கொண்டனர். பாண்டியர் வெப்பமிகுந்த நிலநடுக்கோட்டுப் பகுதியில் வதிந்தமையான் தங் கட்குத் தண்மையும் நிழலும் தந்து மகிழ்வூட்டும் திங்களினைப் போற்றி நிற்கலாயினர். சோழர்களின் நாடு முன்னாளில் பனிமலை வரைக்கும் பரவியிருந்தது. குறை வெப்பப் பகுதியில் அவர்கள் நாடிருந்தமையானும், பாண்டியர் திங்களைக் கொண்டுவிட்டமையா னும் அவர்கள் ஞாயிற்றைத் தங் குலமுதலாகக் கொள்ளலாயினர்.

ஞாயிறு திங்கள் இரண்டையும் முந்திய இரு குலத்தவரும் கொண்டுவிட்டமையான், சேரருக்கு எஞ்சியது 'தீ' ஒன்றே. மற்றும் அவர்தம் மலைநாட்டில் கோடையில் திடுமெனப் பற்றிக் காடெல்லாம் தன் செந்நாக்குகளைப் புரளவிட்டுப் பரவி மேலோங்கி நிற்கும் 'தீ'த் தெய்வத்தை அவர்கள் அச்சத்துக்கும் வழிபாட்டுக்கும் உரியதாகக் கொண்டதில் வியப்புமின்று. வடநாட்டின் ஞாயிற்று, மதிக்குல வழி முறைகள் எல்லாம் சோழ பாண்டிய மரபுகளின் வழிவந்தவையே. பாண்டியரின் முதல் தலை நகரம், பாண்டியர் தம் குலமுதலாகக் கொண்ட 'மதி'யை அடிப்படையாகக் கொண்டு 'மதிரை' என்றழைக் கப்பெற்றது. ஒ. நோ. குதி - குதிரை. பின்னர் அதுவே மதுரை என்றாயிற்று. ஒ. நோ. எதிர்கை - எதுகை. ஆசிரியர் வருகைக்கு முந்திய இந்தியா முழுவதும் சேர சோழ பாண்டியக் குலத்தவரின் மூவரசுகளாகவே பிரிந்திருந்தது. தெற்கில்(தனித்) தமிழரும் வடக்கில் திராவிடரும் வாழ்ந்திருந்தனர். கடல் கோளிலிருந்து தப்பிச்சென்ற தமிழ வழியினரே வடநாடு போந்து, தம் பழம் பாண்டித் தலை நகரின் நினைவாக அங்கும் 'மதுரை' என்ற நகரை அமைத்திருத்தல் கூடும் என்று தோன்றுகின்றது. எனவே அழிந்த பழமதுரையும்

வடநாட்டு மதுரையும் முறையே தென் மதுரை வட மதுரை என அழைக்கப்பட்டன. கால்டுவெல் கடல்கோள்பற்றி அறியாதவராதலின் தற்பொழுதைய தமிழக மதுரையே தென்மதுரை என்று கொண்டார். இது பிழையாகும்.

வங்காளத்திலும் பலுச்சித்தானத்திலும் உள்ள மலைப்பகுதிகளில் சிதைந்துபோன திராவிட மொழிகளும், கிளை மொழிகளும் வழங்குதலும், வடநாட்டின் ஆரியச்சார்பு மொழிகள் என்றழைக்கப்படும் இந்தி, வங்காளி ஆகிய மொழிகள் உண்மையில் வடநாட்டின் திராவிட மொழி உட்கூறுபாடுகளைத் தம்மகத்தே கொண்டிருத்தலும், கல்கத்தாவில் 'காளி' வழிபாடு நிலவி வருதலும், பாடலிபுரம், நாகபுரி எனும் (தமிழ்) இடப்பெயர்களும் பனியா(வாணிகன்) சேட்(செட்டி) என்னும் குலப்பெயர்களும் வடநாட்டில் வழங்கி வருதலும், வரலாற்றுக் காலத்துக்கு முன் வட இந்தியாவில் திராவிடர்கள் பரவியிருந்த தன் அடையாளங்களே!

சோழர் என்றபெயர் 'சொல்' என்பதினின்று பிறந்திருத்தலாகும் சொல் – நெல் எனப் பொருள்படும். 'சோழ வளநாடு சோறுடைத்து' எனும் மொழியை உணர்க.

'ல'கரம் 'ழ'கரமாகத் திரிவது இயல்பே.

எ. கா. கல்(கரிய) - கள்(கரிய) - காள் - காளம்(கருமை) - காழகம். கருமை.

மல் - மால்(கருமை, கருமுகில்) - மழை(கருமுகில், மாரி)
கில்(தொண்டு) - கீழ்(தோண்டு, கிழி)
பொல்(தொளையிடு) - போழ்(தொளையிடு, பிள)

சேரர் என்ற பெயர் சாரல்(மலைச்சாரல்) எனுஞ் சொல்லினின்று பிறந்ததாம். மலைநாட்டுத் தலைவன் சாரல் நாடன் என இலக்கியத்தில் அழைக்கப்படுதல் அறிவோம். சேரநாடு மலைச்சாரல் நாடென்பதில் ஐயமில்லை. ஆதலின் சேரமன்னன் சாரலன் என்றழைக்கப்பட்டான். சாரலன் - சேரலன் - சேரல் என்றாகும். மொழிநூல் விதிப்படியே இம் மாறுதல்கள் அமைந்துள்ளன.

(தொடரும்)

ஆங்கில மொழியாக்கம்

THE SOUTH WIND.

BARADHIDASAN.

O Wind that dances in the vast outer space containing crores and crores of spheres ! If you will, yau can crack to pieces the solid hills, or you will gently pass along, stirring not the tender little **Anicha** flower !

What a vast truth lives in you; but alas, people do not care to know even a small part of it. But O rich south wind that is the born of this southern land, the delight of your touch you have not revealed to any other country than this southern land.

O South wind! you cool yourself among the Pothigai hills where cool, fragrant sandal trees abound, in hale the scents from bright flowers there and hear a great deal of music in the kindling sweet song of the bees. Thus you are growing up every day, and o south wind, is there any who does not welcome you?

I do not see your spirit form but every little move of you vibrates in me. With our own eyes we all see our mothers, but have we ever seen with our physical eyes "mother - love"? But even then is it not that love that brings all the living things to gether?

You blow the fire of the forge. There the black-smith stands oppressed with the enervating heat. you embrace him, your shoulders rubbing against his hill-like ones, and your tender bosom against his. Thus you cool and refresh him tirelessly. O south wind you draw aside the clothings of women, which they never are careless to draw aside, yet they discard you not.

You move the curls on the fore head of my dear dear child on whom my life does rest and regarding it as budding love, you cool its eyes and over - flows its body and then you move the rattle for her; I hail you!

You come in all your freshness with your fragrance and a coolness sweeet. The oppressing heat of sun yon care, and you serve as a remedy for fatigue and then like a kite in the sky you fly above the young branches, singing!

I was writing; you saw the paper on which I wrote and passing along you did give me pleasure as usual. I asked you why you lifted the paper and you said you dusted them! And then you mingled with me again.

Mother Pothigai with her rich areca, and co-co-nut palms, and her Sandal trees gave birth to you and to Tamil and Tamil gives me inner pleasure while yon give me bodily delight. Shall I ever forget this even in my dreams?

O South wind, you gleam in the glossy wings of the happy little beetl and you dance upon the tiny little petals and spill their drops of nectar. You go out into the open to play with the ball with which the little child dues play and then you catch hold of the parrot-wing garment and teer it off!

மொழிபெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

படை வேண்டும்

இரா. இளவரசு.

உதைத்துத் திருத்த ஒருபடை வேண்டும் தமிழ்க்காளையே – அதில்
உன்னையும் உறுப்பின ஞக்கிக் கொள்வாய் இந்த வேளையே!

என்ன தமிழில் இருக்கிற தென்பான்;
இருக்கும் நூல்களைப் பார்த்தும் இரானவன்;
பின்னை மொழிகளின் பெருமையே எங்கும்
பேசித் திரியும் தமிழனைப் பிடித்தே (உதை)

இளங்கோ என்றிடின் ‘கிழங்கோ?’ என்பான்;
‘இணையாய் வால்மீகிக் கேது தமிழில்?’
அளப்பான் இப்படி; கம்பனை அறியான்
‘ஆகா மில்டன்!, எனப்புகழ் வானை (உதை)

இன்றைய பாவலர், சிறுகதை, புதின
எழுத்தா ளர்தம் படைப்பினைப் பாரான்
‘ஒன்றுந் தமிழில் இல்லை இலை’யென
உரத்துப் பேசுவோன் குடுமியைப் பற்றி (உதை)

எடுத்ததற் கெல்லாம் வடமொழி ஆங்கில
இலக்கிய இலக்கணப் புகழ்ச்சியே பாடி
அடைதேன் தமிழை அறியாத தமிழனை
அறிந்தும் ஒளிக்கும் நஞ்சுநெஞ் சானை (உதை)

“ஆட்டுக்கு நான்குகால், மாட்டுக்கும் நான்கே,
ஆதலால் மாட்டை ஈன்றது ஆடே”
ஏட்டினில் ஆராய்ச்சிப் பெயரால் இப்படி
எழுதுகின் றவனைப் பற்றி இழுத்தே (உதை)

தனித்தமிழ்த் தாளிகை பார்க்க மறுத்தும்
தமிழ்ப்பெரி யார்தம் வாழ்வைப் பழித்தும்
தனித்தமிழ் பேசின் எள்ளி நகைத்தும்
தன்னலத் திற்காய்த் தாயை விற்பானை (உதை)

செந்தமிழ் ஒதுக்கி இந்திக் கரியனை
தேட முனையும் வீடணக் குழுவை
நைந்த வடமொழிச் சொற்களை இன்னும்
நாட்டிற் பரப்பும் தாளிகை யாளனை (உதை)

தூங்குவோ ரைநாம் தட்டி எழுப்பலாம்
துயில்பவர் போன்று நடிப்பவர் தம்மை
ஓங்கி அறைந்து செவிப்பறை கிழித்தே
ஒவ்வொரு பல்லையும் எண்ணிக் கொடுத்தே (உதை)

அணுக்களும் மூலக்கூறுகளும்

இனியவன்.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று மொழிந்த ஔவையின் காலமுதற் கொண்டே அணுவை அறிந்திருந்தனர் தமிழர். பொருளின் நுண்ணியதாய்க் கண்களுக்குப் புலப்படாது ஓர்ந்துணரத்தக்கதாய் விளங்கும் வியப்புப் பொருளே அணு. பல்லாற்றலிலும் பெருகிப் பெருமிதங்கொண்டு வெற்றி நடையிடும் இன்றைய அறிவியலுலகு, அக்குறுகிய அணுவிற் பொதிந்த பரந்த பொருளையும் விரிந்த திறனையும் பாரறியக் காட்டியிருக்கிறது. உள்ளுதலும் உள்ளியுரைத்தலுமே துணையாக் கொண்டு, இன்றைய ஆற்றல் மிகு கருவிகள் ஏதுமின்றி, அணுவையுணர்ந்திருந்த அன்றைய மக்கள், அதுவே பொருட்களின் அடிப்படைக் கூறென எண்ணியிருந்தனர். பொன் கட்டியைப் பிளந்து கொண்டே சென்றால் இறுதியாகப் பெறும் சிறு துகளும் பொன்னே. மேலும் பிரிக்கமுடியாத அந்தத் துகளையே அணு என்றனர் கிரேக்க நாட்டறிஞர்கள். கற்பனையின் எல்லையிலேயே நிலவிவந்த அணு, பதினேழாம் நூற்றாண்டில் உலக நிகழ்ச்சிகட்கு விளக்கம் தரும் பொருளாய் உருவெடுத்தது. நியூட்டன், பாயில், பெர்நாலி போன்ற அறிவியலாளர்கள் வளிமங்களின் (Gases) தன்மைகளை விளக்க அணுவை அடிப்படையாகக் கொண்டனர். இயைபியலறிவு வளர வளர, இயைபியக்கங்கள் (Chemical reactions) பல ஆய்வுச் சாலைகளில் கிளைத்தெழ, அணுக்கொள்கை உறுதியாக நிலைக்கலாயிற்று. பொருள்களனைத்தும் மேலும் பிரிக்கமுடியாத நுண்ணிய துகள்களான அணுக்களாலானவை என்ற கொள்கை உருவாகியது. இன்றைய அறிவியலின் வளர்ச்சிக்கு இக்கொள்கையே மூல காரணம். இக்கொள்கையாற்றான் இயைபியலறிவு ஒழுங்கான வடிவம் பெற்றதெனலாம். அணுவைப்பற்றிய அறிவே இயைபியக்கங்களைத் தெளிவுபடுத்துகின்றது. இயைபியக்கங்களை ஆளும் இயைபியல் விதிகள் அணுக்களையும் மூலக்கூறுகளையும் (Atoms and molecules) பற்றிய விளக்கங்களே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மூடநம்பிக்கைக்குப் புதைகுழி தோண்டப்பட்டது. இரும்பைப் பொன்னாக்குவதாகப் பிதற்றிவந்த இதள்மாற்றியர் (Alchemist) திரை மறைவில் ஒதுக்கப்

பட்டனர். ஒழுங்கற்ற ஆய்வுகளும் செய்முறைகளும் அறிஞர்க ளிடையே மதிப்பிழந்தன. பிரீஃச்ட்லி, கேவண்டிசு, இலவாசியர் போன்ற இயைபியலறிஞர்கள் மாழைகள் (Metals) காற்றில் எரிந்து தீயதைகளாக (Oxides) மாறுவதைக் கண்டறிந்தனர். பொருள்கள் இயைந்து வேறு பொருளாக மாறுகையில், அவை குறிப்பிட்ட அள விற்றான் ஒன்றோடொன்று இணைந்தன இதனால் அளவியைபியல் (Quantitative chemistry) உருவாகியது பொருட்கள் இணையும் விதிகள்பல பெருகின. இந்த வளர்ச்சியே அறிஞர் டால்டனை அணுக் கொள்கையை நிறுவச்செய்தது.

பொருள்கள் யாவும் அழிக்கமுடியாத, மேலும் பிளக்கமுடியாத சிறு துகள்களான அணுக்களாலானவை என டால்டன் கூறினர். "ஒரு குறிப்பிட்ட தனிமத்தின் அணுக்களனைத்தும் ஒரே தன்மை யானவை; குறிப்பாக அவையனைத்தும் ஒரே பொருண்மை (Mass) உடையவை. இயைபியக்கம் (Chemical reaction) என்பது மாறு பாடான அணுக்கள் இணைவதும், இணைந்த பொருட்களின்று அணுக்கள் பிரிவதுமாகும். இயைபியக்கத்தில் அணுக்கள் புதியவாக ஆக்கப்படுவதோ அன்றி அழிக்கப்படுவதோ கிடையா. இயைபியக்கத் தில் அணுக்கள் குறிப்பிட்ட முழுஎண் விழுக்காட்டில் இணைகின்றன" இவையே டால்டனின் கொள்கையாக விளங்கின. இன்று அறிவிய லுலகில் அவரது கொள்கை பெருமளவு மாறுதலுக்குள்ளாகியிருக் கிறது. எடுத்துக்காட்டாக அணுக்கள் பிளக்கப்படுவதை இன்று காண்கிறோம். ஒரே தனிமத்தின் அணுக்கள் பொருண்மையில் வேறு படுவதையும் அறிகிறோம். இருப்பினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், நுண்கருவிகள் ஏதுமின்றி, அவர் நிலைநிறுத்திய கொள்கை அவரது அறிவாற்றலையே காட்டுகின்றது. அவரது கொள்கையால் அறிவியலே பெரு மாற்றமடைந்தது.

இன்று நாம் அணுவைக் கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறோம். "ஒரு தனிமத்தின் மிகச் சிறிய துகளே அணுவாகும். அஃது இயை பியக்கத்தில் பங்கு பெறக்கூடியது". ஒரு குறிப்பிட்ட தனிமத்தின் அணுவைப் பிளந்து விட்டால், அந்த அணு அத்தனிமத்தின் தன்மையை இழந்துவிடும். எல்லாத் தனிமங்களின் அணுக்களும் பிற தனிம அணுக்களுடனோ அன்றி ஒரே தனிம அணுக்களுடனோ இயைபுப் பிணைப்பால் (Chemical bond) இணைந்து நிலைத்த வடிவம்

பெறமுடியும். சில தனிமங்களின் அணுக்கள் இவ்வாறு இணையாமலே தனித்து நிலைத்து நிற்கின்றன. "நிலையாகத் தனித்து நிற்கக் கூடிய கூட்டுப் பொருள்களின் அல்லது தனிமங்களின் சிறிய துகள்களே மூலக் கூறுகள் (Molecules)" என வரையறுக்கிறோம். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட அணுக்களிணைந்தவையே மூலக்கூறுகள். கூட்டுப்பொருள்களின் சிறிய துகள்களைக் குறிக்க வந்த மூலக்கூறு எனும் சொல், இன்று தனிமங்களின் சிறு துகள்களையும் குறிக்கிறது. ஏனெனில் தனிம அணுக்கள் தனித்து நிலைப்பதில்லை. இரண்டிரண்டு அணுக்களிணைந்த மூலக்கூறுகளாகவே அவை நிலைத்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக நீரக அணுக்கள் (Hydrogen gas) தனித்து விளங்குவதில்லை. இரண்டு நீரக அணுக்கள் இணைந்த நீரக மூலக்கூறுகளாகவே (Hydrogen molecule H_2) நிலைத்திருக்கின்றன. நார்ம (Cellulose) மூலக்கூற்றில் ஆயிரக் கணக்கான அணுக்கள் இணைந்திருக்கின்றன. மூலக்கூறுகளைப் பிளந்தால் அவை அணுக்களாகப் பிரிகின்றன.

டால்டனது கொள்கை அக்காலத்திற் பரவலாக ஒப்புக்கொள்ளப் படாத போதிலும், அளவீடு முறையில் (Quantitative way) நடந்த ஆய்வுகளால் விளக்கப்பட்டவுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவரது கொள்கையின் அடிப்படையில் தோன்றியவையே இயைபு இணைப்பு விதிகள் (Laws of chemical combination) எடையளவீடு பகுப்பு களால் (Gravimetric analaysis) இயைபியக்கங்களில் பொருள் களுக்கிடையேயுள்ள எடையுறவு (Stoichio metric) விதிகளை இயைபியலாளர்கள் ஏற்படுத்தினர்.

பொருண்மை நிலைப்பு விதி (Law of conservation of mass)

'இயைபியக்கங்களில் பொருள்கள் ஆக்கவோ, அழிக்கவோ படு வதில்லை'; இதுவே இயைபு இணைப்புவிதிகளில் முதன்மையானது. ஒரு மாழைத்துண்டு (Metal piece) காற்றில் எரியும்பொழுது, அதனிலும் மிகுந்த எடையுள்ள புதிய பொருள் உண்டாகிறது. இதனின்று பெறப்படுவது, மாழைத்துண்டு காற்றிலுள்ள வேறொரு பொருளுடன் (தீயகத்துடன்) இயைந்து, அதனினும் மிகுந்த எடையுள்ள பொரு ளாக மாறியிருக்கிறது என்பதே. புதிதாகப் பொருள் ஆக்கப்பட்டிருக் கிறது எனக்கொள்ளமுடியாது. இதனை இலவாசயர் தமது ஆய்வு

மூலம் மெய்ப்பித்துக் காட்டினர். காற்றுப்புகாமல் மூடப்பட்ட குடுவையில் குறிப்பிட்ட எடைகளுள்ள இதளை(Mercury)யும் உயிரியத்தையும் எடுத்துக்கொண்டு அக்குடுவையின் மொத்த எடையைக் கண்டார். பின்பு இயை பியக்கம் (Chemical reaction) குடுவையில் நடைபெற்றது. இதள் தீயதை (Mercuric oxide) என்ற புதுப்பொருள் உருவெடுத்தது. இயக்கத்தின் இறுதியில் அக் குடுவையை நிறுத்தபொழுது, முதற்கண்ட எடையே காணப்பட்டது. இதனால் இயைபியக்கத்தில் பொருட்கள் புதிதாக ஆக்கப்படுவது மில்லை; அழிக்கப்பெறுவதுமில்லை யென்பது தெளிவாயிற்று.

குறிப்பிட்ட எடை விழுக்காட்டு விதி.

(Law of Definite proportions).

ஒரு குறிப்பிட்ட தூயதான பொருள் எந்த முறையில் தோன்றினுலும், அதிலுள்ள தனிமங்கள் குறிப்பிட்ட எடை விழுக்காட்டிலேயே (proportion by weight) இணைந்திருக்கின்றன. எடுத்துக் காட்டாகக் காலகத் தீயதை [Nitric oxide] (No)யைச் சிதைக்கும் பொழுது (decompose) வெளியிடப்படும் காலகத்தின் (Nitrogen) எடையைப் போல் 1 · 14 மடங்கு எடையுள்ள தீயகம் (oxygen) வெளிப்படுகின்றது. காலகத் தீயதை (Nitric oxide) எந்த முறையில் ஆக்கப்பட்டதாக இருந்தாலும், இந்த ஆய்வு எவ்விடத்தில் செய்யப்பெறுவதாயினும் இதே விழுக்காட்டிலேயே காலகமும், தீயகமும் $\left(N_2 / O_2 = \frac{1}{1{\cdot}14}\right)$ வெளியிடப்படும். இந்தப் புதிருக்கு டால்டன் தமது அணுக்கொள்கை மூலம் விளக்கம் தந்தார். அவரது கொள்கைப்படி அணுக்கள் குறிப்பிட்ட முழு எண் விழுக்காட்டிலேயே இணைகின்றன. எனவே, தீயக அணுவின் எடை காலக அணுவின் எடையைப்போல் 1 · 14 மடங்கு இருந்தால் காலகத் தீயதை (Nitric oxide) மூலக்கூறில் காலகத்திற்கும் தீயகத்திற்குமுள்ள எடை விழுக்காடு 1 : 1·14 ஆகும். ஒரு மூலக் கூறிலுள்ள விழுக்காடே பல மூலக் கூறுகளிலும் இருக்கும். பொதுவாக, ஒரு மூலக்கூறில் எத்தனை அணுக்கள் இருந்தாலும், ஒவ்வோர் அணுவிற்கும் குறிப்பிட்ட எடை இருந்தால், அணுக்களின் எண் விழுக்காடே (Proportion by

number) மூலக் கூறுகளின் எடை விழுக்காட்டைத் தீர்மானிக்கும். இந்த விளக்கமே அணு எடை (Atomic weight) என்ற கோட்பாட்டை உருவாக்கிற்று

இந்த விதியும் பல அறிஞர்களால் ஒப்பப்படவில்லை. இசுதாசு (Stas) என்பவர் பல இடங்களிலிருந்தும் பெறப்பட்ட வெள்ளிப் பாசதை (Silver chloride)யில் வெள்ளியும் (Silver) பாசகமும் (chlorine) குறிப்பிட்ட எடை விழுக்காட்டில் இணைந்திருப்பதை மெய்ப்பித்தார். ஆதலின் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தனிமங்கள் குறிப்பிட்ட எடை விழுக்காட்டில் இணைந்தவையே கூட்டுப் பொருள்கள் (compounds) என்கிறோம்.

சமவிழுக்காட்டு விதி (Law of Equivalent proportion)

தனியான கூட்டுப்பொருளில் தனிமங்கள் நிலையான எடை விழுக்காட்டில் இணைந்திருக்கின்றன எனக் கண்டோம். பல கூட்டுப் பொருள்களில் பொதுவான தனிமங்கள் விழுக்காட்டு உறவில் இணைந்திருப்பதுடன், பொதுவான தனிமங்களாலான பலகூட்டுப் பொருள்களிலும் தனிம விழுக்காடுகளில் (elemental proportions) அளவான தொடர்பீடு (Quantitative correlation) இருப்பதைக் காணலாம் எடுத்துக்காட்டாக மீதேன் (Methane), கரியிரு தீயதை (carbon-di-oxide), கரிநால் பாசதை (carbon tetra chloride) என்ற முப்பொருளிலும் கரிமம் (carbon) இணைந்திருக்கிறது. 3 · 003 பங்கு கரிமம் 1 · 008 பங்கு நீரகத்துடன் (Hydrogen) இணைந்து மீதேனுகவும், 8 · 000 பங்கு உயிரியத்துடன் (oxygen) இணைந்து கரியிரு தீயதையாகவும், 35 · 46 பங்கு பாசகத்துடன் (chlorine) இணைந்து கரிநால் பாசதையாகவும் மாறுகின்றது. நீரில் நீரகமும் தீயகமும் இணைந்திருப்பது 1 · 008 : 8 · 000 என்ற விழுக்காட்டில் தான். கீழே காணும் பட்டியலில் வெவ்வேறு தனிமங்கள் இணைந்திருக்கும் எடை விழுக்காட்டைக் காணலாம். எப்பொருளாய் இருப்பினும் தனிமங்கள் மற்றத் தனிமங்களுடன் இணையும்பொழுது குறிப்பிட்ட எடை விழுக்காட்டில் இணைகின்றன என அறியலாம். அந்தக் குறிப்பிட்ட எடை விழுக்காட்டையே இணை சமன் எடை (Equivalent weight) என்பர்.

தனிமங்களின் எடை விழுக்காடுகள்

கூட்டுப்பொருள்கள்		நீரக எடை	தீயக எடை	பாசக எடை	கரிம எடை
மீதேன்	[C H_4]	1·008			3·003
நீர்	[H_2 O]	1·008	8·000		
கரிநால் பாசதை	[CCl_4]			35·46	3·003
பாசகத்தீயதை	[Clo]		8·000	35·46	
நீரகப் பாசதை	[Hcl]	1·008		35·46	
கரியிரு தீயதை	[Co_2]		8·000		3·003

கூட்டுப்பொருள்களின் இயைபியக்கங்களையும், அவற்றின் தன்மைகளையும் கண்டறிந்து, அவற்றையே ஆராய்ந்து வந்த இயை பியலாளர்கள், இவ்விதிகளை அறிந்ததும், பல கூட்டுபபொருள்களை யும் எடையுறவு கொண்டு ஒப்பிடத் தொடங்கினர். பல ஆய்வுகளின் முடிவாகச் சமவிழுக்காட்டு விதி உருவாயிற்று. ''தனிமங்கள் குறிப் பிட்ட எடையுள்ள ஒரு தனிமத்துடன் இணையும் எடையளவு, தமக் குள் அவை இணையும் விழுக்காடாகவோ அல்லது அந்த விழுக் காட்டின் மடங்காகவோ அமையும்'' என்பதே அவ்விதி.

பெருகு விழுக்காட்டு விதி (Law of multiple proportions)

பல சமயங்களில் இரண்டு தனிமங்களிணைந்து இரண்டிற்கு மேற்பட்ட மாறுபட்ட கூட்டுப்பொருள்களாக மாறுவதும் உண்டு. ஒரு நிலையான எடையுள்ள தனிமத்துடன் இணையும் இரண்டாவது தனிமத்தின் எடைகளுக்குள் முழு எண் விழுக்காட்டு உறவு உண்டு. எடுத்துக்காட்டாகக் காலகமும் தீயகமும் இணைந்து கீழ்க்காணும் ஐந்துவகைக் கூட்டுப் பொருள்கள் உண்டாகின்றன. இக்கூட்டுப் பொருள்களில் ஒரு சீரெடை (கிராம்) காலகத்துடன் இணையும் தீயகங் களின் எடைகளுக்குள் முழுஎண் விழுக்காட்டு உறவு இருப்பதைப்

பட்டியலில் காணலாம். தீயகத்தின் எடைகள் ஒரு கூட்டுப்பொருளி லுள்ள உயிரியத்தின் எடையின் பெருக்குத் தொகைகளாக (mutiples) இருக்கின்றன. இதனையே பெருகு விழுக்காட்டு விதி (Law of multiple proportion) என்கிறோம்.

கூட்டுப்பொருள்	காலக எடை (சீ. எ.)	அதனுடன் இணைந்த தீயக எடை (சீ. எ.)	தீயகத்தின் பெருகு மடங்கு
இருகாலகத் தீயதை [Nitrous oxide N_2O]	1·000	0·57	1 x 0·57
காலகத் தீயதை [Nitric oxide NO]	1·000	1·14	2 x 0 57
இருகாலக முத்தீயதை [Dinitrogen trioxide N_2O_3]	1·000	1·71	3 x 0·57
காலக இருதீயதை Nitrogen dioxide NO_2]	1·000	2·28	4 x 0·57
இருகாலக ஐந்தீயதை [Dinitrogen pentoxide N_2O_5]	1·000	2·85	5 x 0 57

இந்த விதியும், மேலே கண்ட மற்ற விதிகளும் டால்டனின் அணுக் கொள்கையின் அடிப்படையில் விளக்கப்படுபவையே. இவை யாவும் ஆய்வுகளால் மெய்ப்பிக்கப்பட்டவை.

இணைசமன் எடை (Equivalent weight)

சம விழுக்காட்டு விதியை விளக்குகையில், தனிமங்கள் குறிப் பிட்ட எடை விழுக்காட்டில் இணைகின்றன என்றும் அந்த எடையே இணைசமன் எடை என்றும் கண்டோம். 8 · 000 சீரெடை (கிராம்) தீயகத்துடன் இணையும் தனிமத்தின் எடையே அதன் இணைசமன் எடை (Equivalent weight) ஆகும். ஒரே தனிமத்திற்கு ஒன்றிற்கு

மேற்பட்ட இணைசமன் எடைகளுண்டு. இதற்குக் காரணம், அத் தனிமத்திற்கு மாறுபட்ட இணைதிறன் (Variable valency) இருப்பதே.

பொதுவாகத் தனிமங்கள் அளவீடு முறையில் (Quantitative way) இணைகின்றன. தனிமங்களை ஆக்குவது அவற்றின் அணுக் களே. அணுக்களுக்குக் குறிப்பிட்ட பொருண்மை (mass) இருப்ப தாலும், அணுக்கள் பிறவற்றுடன் குறிப்பிட்ட முழு எண் விழுக் காட்டில் இணைவதாலும் மேலேகண்ட விதிகளைப் புரிந்துகொள் கிறோம். இவை யாவற்றுக்கும் காரணம் யாதெனக் காண விழைந்த அறிவியலாரின் வேட்கையே அணுவின் அமைப்பை உலகறியச் செய்தது. O

தமிழக விடுதலை இயக்கம்!

"தமிழக விடுதலை இயக்கம்" ஒன்றை விரைவில் தொடங்கு வதாக நாம் முன்பே அறிவித்தது தென்மொழி அன்பர்களுக்கு நினை விருக்கலாம். அவ்வாறு தோற்ற விருக்கும் அவ்வியக்கத்தின் அமைப்பு மிகவும் கட்டுப்பாடாகவும் செப்பமாகவும் இருத்தல் இன்றி யமையாதது. இனி, இயக்க அமைப்பைவிட அதில் உறுப்பினராக இருக்க வேண்டியவர்கள் மிகவும் செப்பமும், உறுதியும், வினை யாண்மையும் கொண்டு, எத்தகைய முடிவுக்கும் கட்டுப்பட்டவர்களாக வும் இருத்தல் வேண்டு மன்றோ? எனவே தோற்றப் பெறும் அவ் விடுதலை இயக்கத்தில் உறுப்பினராக விரும்புவார் தம்தம் கல்வி, தொழில், குடும்பச்சூழல், அகவை, ஈடுபாட்டு அளவு முதலியன வற்றைத் தெளிவாக, பெருஞ்சித்திரன், தென்மொழி கடலூர்-1. என்ற முகவரிக்கு முடப்பெற்ற பதிவஞ்சலில் விடுக்க வேண்டுகின் றேன்! பிற விளக்கங்கள் அவ்வப்பொழுது தென்மொழியில் வரும்.

— பெருஞ்சித்திரன்.

மேகலை

ஆசிரியப் பிழைமக்கள் !

அன்புடையீர்,

வித்துவான் நா. பழநியப்பன், புலவர் தா சிங்காரவேலு என்பாரால் எழுதப்பட்டு, ஆறும் வகுப்பிற்குத் துணைப்பாட நூலாக வைக்கப்பெற்றுள்ள 'இலக்கியக் கதைகள்' என்னும் சிறுநூல் ஒன்றினைக் கண்டேன். இந்நூலில் ஒன்பது கதைகள் உள்ளன. அவ்வொன்பதில் ஐந்தின் பெயர் சுட்டி, அவற்றில் வரும் முதற் சொற்றொடர்களை மட்டும் ஈங்கெடுத்தெழுதியுள்ளேன்.

முதற்கதை : ஆதி மந்தியும் ஆட்டனத்தியும்

"சோழ நாட்டின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினம்..."

இரண்டாம் கதை: ஆதிரையும் சாதுவனும்

"சோறுடைய நாடு சோழநாடு. அந்நாட்டின் தலைநகரமாகவும், துறைமுக நகரமாகவும் ஒரு காலத்தில் புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினம் விளங்கிற்று..."

நான்காம் கதை : மாலதியும் மாற்றாள் மகவும்

"காவிரிப் பூம்பட்டினம் என்பது சோழநாட்டின் தலைநகரம் ஆகும்..."

எட்டாம் கதை : கோ'து'('த்'?)மையும் சார்ங்கலனும்

"சோழ நாட்டின் தலைநகரம் காவிரிப்பூழ்பட்டினம். அதற்குப் புகார் என்ற பெயரும் உண்டு..."

ஒன்பதாம் கதை : கோப் பெருஞ் சோழனும் பிசிராந்தையரும்.

"உறையூரைத் தலைநகரமாகவும், காவிரிப்பூம்பட்டினம் என்னும் புகார் நகரைத் துறைமுகப் பட்டினமாகவும் கொண்ட சோழப் பெரு நாட்டை ஆண்ட வேந்தர்கள் பலர்..."

பிழை செய்து பிழைக்காதீர்!

-மணிவேலன்.

"சுவற்றினிலே விளம்பரங்கள் ஒட்டாதீர்!"
எனவெழுதித் தொலைக்க வேண்டா!
"சுவரினிலே..." என்றெழுதிப் பிழைதவிர்ப்பீர்;
ஓவியர்காள்! சுவரில் நாளும்
தவற்றினைநீர் பெருக்குவதால் தமிழ்கெடுத்துச்
சுவர்கெடுத்துக் கெட்டுக் குட்டிச்
சுவராகிப் போகாதீர்! பிழையின்றித்
தமிழெழுதத் தெரிந்து கொள்வீர்!

"எந்தனுளம் நோகிறதே" என்றுவரும்
திரைப்படத்தின் இனிய(!) பாடல்
வந்திரண்டு செவிகளிலே அம்பாகித்
தொளைக்கையிலே வாய்த்த நெஞ்சம்
நொந்திடுமே...! வெந்திடுமே...! ஐயையோ!
பொறுத்திடவோ? நோவென் செய்வேன்!
'எந்தன்,'உந்தன்' என்றெழுதும் திரைப்படத்துப்
பாவலர்காள்! எங்கு கற்றீர்?

(முன்பக்கத் தொடர்ச்சி)

இந்நூலை யாத்த ஆசிரியப் பெருமக்களை என்னென்று அழைப்பது? எற்றென்றிரங்குவது? ஒவ்வொரு கதையும் ஒவ்வொருவரால் அஃதாவது ஒன்பது பெயரால் எழுதப்பெற்றது போல் தெரிகிறது!

பாடநூற்குழுவினர் பரிந்துரை செய்ய, அரசினரும் இதனைப் பாடநூலாக வைக்க அரசிதழ்வழி ஒப்புதல் அளித்துள்ளனர். அரசினரையோ அல்லது பாடநூற் குழுவினரையோ பிழை கூறவில்லை; ஏனெனில் இது தமிழரசு அன்று; பாடநூற் குழுவினரும் தமிழ் புரப்போர் அல்லர். ஆயின், தமிழ்ப் புலவர்கள், தமிழ் ஆசிரியர்கள் போன்றோர், இவ்வாறு ஒரு சிறு நூலில், சிறு செய்தியை, தொடக்க வரியிலேயே 'கூறியது கூறிக்'கொண்டு போதல் செப்பமாகுமா?

கோவை-15
27—8—66

அன்புடன்,
ஆ. துரைக்கண்ணு.

உந்துவண்டிப் பயணத்தைத் தொடங்கியநான்
அறிவிப்பை உற்றுப் பார்த்தேன்
"உந்துவண்டி நின்றபின்னர் இரங்குங்கள்!"
எனக்கண்டு நெஞ்சம் நொந்து
செந்தமிழின் நிலைகண்டே இரங்கினேன்!
வேறென்ன செய்வ திங்கே?
எந்தமிழைக் கெடுப்பதென எந்தமிழர்
முடிவெடுத்தே இருக்கின்றாரோ?

"ஞாயர்விடு முறை"என்ற அறிவிப்பைக்
கடைகளிலே நாட்டு கின்ற
பேயர்காள்! தமிழுக்குக் கேடுசெயும்
திருப்பணிக்கே(!) பிறந்தீர் போலும்!
நாய்எதற்கோ அலைவதுபோல் பிறமொழியைக்
கற்பதற்கு நாடு கின்றீர்!
தாய்மொழியைப் பிழையின்றிக் கற்பதற்குப்
பொழுதிலையோ தடியன் மாரே?

ஆங்கிலத்தில் பிழைகண்டால் அலறுகின்றீர்!
அதட்டுகின்றீர்! அருந்த மிழ்பால்
தேங்கிவிடப் பிழைசெய்தால் மகிழ்கின்றீர்!
சீ!சீ!சீ! தீய செய்கை!
'ஏங்கானம்?' இதழ்களிலே பிழைதமிழை
வளர்க்கின்றீர்? எடுத்துச் சொன்னால்
மாங்காட்டுத் திருடர்போல் விழிக்கின்றீர்!
மதிகெட்ட மந்தை யோரே!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்.

தனியிதழ் 15 காசு

ஆண்டுக் கட்டணம் (மலருட்பட) 2 உருபா,
ஒரு படிக்கு 30 காசு முன் பணம் கட்டும் முகவர்கள்
உடனே விண்ணப்பிக்க.

அமைச்சர்.

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

தமிழின ஒழுக்கம்

புலவர். தி. நா. அறிவுஒளி

ஒழுக்கத்தால் உயர்ந்து விளங்கிய இனம் தமிழினமே செல்வமும் செல்வாக்கும் ஆர்வாரமும் ஆர்ப்பாட்டமும் செழித்த வளங்கெழு நாகரிக வாழ்வில் திளைத்த தமிழர் தனிவாழ்விலும், பொது வாழ்விலும், ஒப்பற்ற ஒழுகலாற்றைப் பேணியோம்பிச் சிறந்தனர். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என நம்பி, ஏற்று வாழ்ந்த நல்லினம் தமிழினம் ஒழுக்கம் மட்டுன்றி மொழியிலும் இலக்கியத்திலும் கலையிலும் கைக்கொள்ளப்பட்டு வந்தது. அதனுற்றான் மரபும், வழக்காறும் எல்லாத் துறையிலும் ஆழ்ந்து வேருன்றி விளங்கியது. தாம் மட்டும் ஒழுக்கமாக வாழ்வதோடமையாது; உலகினர் யாவரும் ஒழுங்காக வாழ வேண்டும் எனத் தமிழர் பொது நலவுணர்வோடு கருதினர்.

> "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
> ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை"

எனப் பாட்டிசைத்த முன்னோர் உட்கோள் என்றும் எண்ணி மகிழ்தற்குரியது.

தமிழினம் போல உலக நாடுகளிலுள்ள பிற இனத்தினரும் ஒழுக்கத்தால் உயர்ந்து விளங்காமையால், பிற துறையில் பலவகை வளர்ச்சியும் கிளர்ச்சியும் அமைந்தும் உயர் வாழ்வு, சீர்வாழ்வு அமையவில்லை. நுட்பமான வாழ்வின் ஒட்பத்தை உணராதவராகி உலகோர் துன்புறுகின்றனர். தமிழினம் இன்று தமிழறிவுக் குறைவாலும், முறையான தமிழ்க் கல்வி யின்மையாலும் தமிழ் ஒழுக்கமேன்மையறிந்து வாழாமையால் பல்கோடித் துன்பமும் கேடும் உற்று வாடுகிறது. இடைக்காலத் தமிழர் சிலர் பிற இனத்தாரின் ஆகா நடத்தைகளை நல்லொழுகலாருகப் பிழைபட உணர்ந்து ஏற்க முனைந்து இனப்பகைவராக ஆகிவிட்டனர்! இதனுல் விளைந்தகேடு அளவற்றதாம்

இற்றை ஞான்று திரைப்படத் துறையில் தமிழின மகளிரை விடப் பிற இன மகளிர் புரியும் இழுக்கும், மானக்கேடும் அளவற்று மலிந்து கிடப்பதை யாரே அறியார்? தமிழர் செல்வமும் செல்வாக்கும் பிற இனத்தார்க்கு இறைக்கப்பட்டுப் பாழாவது தமிழினத்துக்கு மாபெருங் கேடே என்பதைக் கூறவும் வேண்டுமோ?

தமிழர், வேற்றின மகளிரின் காமவெறியாட்டுகளைக் கண்டும், அன்னாரின் இழிந்த தோற்றப்படங்களில் வெறியுற்ற நெஞ்சால் வேட்டும் உருகிப் பாழ்பட்டுத் தம் நல்லாற்றலையும் நல் வாழ்வையும் பாழ்படுத்திக் கொள்வது பெரிதும் நாணற்குரியதும், கண்டித்துத் திருத்துதற்குரியதுமாகும். சிற்றின்ப வெறிப்பராகத் தமிழரைப் பாழாக்கி அழிவுக்குழியில் தள்ளும் மாற்றினச் சூழ்ச்சிக்குப் மறத் தமிழர் மாண்பிழந்து பலியாதல் அறநெறியாகுமா? நம் திறமும் வளமும் ஆக்க முயற்சியும் குறுகிய வெறியாவலுக்கு இரையாகிப் பாழாவது ஒரு பொது இழப்பாகும்.

உலகுக்குப் பயன்படும் ஆக்க நினைவுகள், முயற்சிகள், தொண்டுகளில் தமிழிளைஞர் பேரீடுபாடு கொண்டு பல்வகைத் துறைகளிலும் முயன்றுழைத்து முன்னேறவேண்டிய மிக இன்றியமையாத இவ்வறிவியல் நூற்றாண்டில் கலை என்று போலிப்பெயர் கூறிக் காமக்களிமயக்கில் வரையறையின்றி, நம் பண்புக்கு மாறாகத் திளைத்தாடுந் தீமை எத்துணை கொடிது!

திருக்குறளையும், அறநூல்களையும் தேர்வுக்கெனக்கற்று, அன்றே மறந்தொழியவோ அவை ஆன்றோரால் யாக்கப்பெற்றன? அந்தோ! எத்துணை பொய்மை மனங்கள் மண்டிவிட்டன! நாட்டில் கல்வி என்பது வாழ்வொழுக்கத்துக்காக அமைவது என்பது முற்றும் இல்லாமற் போய்விட்டதே! இஃதெத்துணை இழிவு நிலை!

இன்றும் தமிழினப் பகைவர், புகழ்க்கள்ளை யூட்டியே தமிழரையும் தமிழறிஞர், தலைவர்களையும், தம்மடிப்படுத்தி ஆட்டிப்படைக்கின்றனர். இதனால் தமிழின நலன், தமிழின வளர்ச்சி பாழ்படுகிறது; மாற்றார் சுரண்டி வாழ வாய்ப்பேற்படுகிறது. புகழ் ஆவல் தவிர்க்க முடியாதது என்பதை உடன்படலாம். ஆயின், தன் புகழ்ப் பசிக்காகத் தன்னின மக்களைப் பழிவாங்குவது அறிவுடைமையா? அறமா? முறையா? வேறு எவ்வினத்தாரும் இத்தகு குறைபாடுடையவராயிலர். இனக் கேடு நேராத வண்ணம் புகழ்வேட்டை யாடலாமே! இதற்கு அடிப்படை இடைக்காலத்தில் தமிழினத்திற்கு ஊட்டப்பட்ட தன்னலவெறிக் களிப்பே என்பதை உறுதியாய்க் கூறவேண்டும். தன் நலனுக்காக ஒரு தமிழன், இன்னொரு தமிழனை அழிக்கவோ, பழிக்கவோ, எதிர்க்கவோ அணுவளவும் தயங்கமாட்டான். இன்றைய அரசியல் கட்சிகளும் கட்சித் தலைவர்களும், கட்சியாட்களும் இதற்குத் தக்க சான்றாகும்.

'ஆரவாரப் பொழுதுபோக்குகள்' தமிழரை அடிமைப்படுத்தி ஆட்டிவைக்கும் கொடுமையை நினைக்க நெஞ்சங் கொதித்து வருந்துகிறது. ஆண்டுதோறும் நாடோறும் தமிழன் பலபெயரால், கடமைகளை மறந்து ஆர்ப்பாட்ட சிற்றின்ப விழாக்களில் தன்னையிழந்து வாழ்வைப் பாழாக்குகிறான். இதனால் பொருளும், பொழுதும், நல்லுணர்வும் நலமும் எவ்வளவு பாழாகின்றன! அரசியலால், சமயத்தால், நட்பால், குடும்பத்தால், கலையால் எவ்வளவு போலிப் பொழுதுபோக்குகள்! எவ்வளவு ஆர்ப்பாட்டச் சுவைகள்! ஒவ்வொருவனும் தன் நிலைக்கு மீறிய வீண்பொழுது போக்குக் களியாட்டத்தில் திளைக்கும் கொடுமடமையைச் சுட்டிக்காட்டவே வேண்டும், குறிப்பாகத் தமிழ் இளைஞரும் மகளிரும் தற்காலத்தில் 'பொழுது போக்குக்காகவே தாம் உலகில் தோன்றி வாழ்வதாகக் கருதி இயங்கக் காண்கிறோம். அரிய மக்கட் பிறவியைப் பயனின்றி வீண் பொழுதுபோக்காகக் கருதிப் பாழாக்கும் மடமையை என்னென்போம்! இந்நிலை மாளவில்லையெனில் தமிழகம் வெறிபிடித்தழியும் சிற்றின்பக் கயவர் கூட்டமாகிவிடலாம். அவ்வஞ்சத்தக்க நிலைக்கு இளந்தமிழ்மரபு ஆளாகக் கூடாது.

காலமாறுதலை உணர்ந்து, தக்கவற்றைத் தமதாக்கித் தகாதவற்றைப் புறக்கணித்து, முன்னேறும் ஆர்வ எழுச்சி தமிழர்க்கு இன்னுஞ் சிறப்பாக அமையவில்லை. தம்மூர், தம்கோயில், தம்போலிமறம் பேசித் திரிவதிலேயே பகற்கனவு காண்போராய்ச் சிதைகின்றனர். உலகில் பிறநாட்டார் அறிவு - கலைத்துறைகளில் பலகோடி மடங்கு வளர்ந்துயர்ந்து ஓங்கித் திகழ்வதை உணர்ந்து அறியவும் முயலா மடியரினமாகத் தமிழினம் 'கிணற்றுத் தவளை'யாகக் கிடக்கிறது.

தமிழகத் தலைவர், அறிஞர், செல்வர், அரசியலாளர் ஏழைப் பொது மக்களை ஏய்த்துப் பிழைப்போராய் - நல்ல நடிகர்களாய் - வாழ்கின்றனரே தவிர, மக்களுக்கு உண்மை நலன் புரியும் நற்றொண்டராய்த் திகழவில்லை. இதனை மக்களும் தெள்ளத் தெளிய உணராமல் 'போற்றி' இசைத்து வீணாகின்றனர். அளவற்ற குறைபாடுகளில் சிலவற்றையே எடுத்துரைத்தேன். வாழ விரும்பும் தமிழினம் இவற்றைக் களைந்து வளரவேண்டும்.

'தென்மொழி' தரும் தனித்தமிழ் அரசியல் கிழமை இதழ்!

விரைவில் எதிர்பாருங்கள் !!

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ ? – முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறுய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு !

தமிழகம்

நேற்று – இன்று – நாளை

எழுதியவர்: **இர. சின்னசாமி.**

கிடைக்குமிடம்: **பாரதி புத்தக நிலையம், மதுரை.**

விலை உருபா : **இரண்டு.**

இற்றை நாளில் நம் தமிழ் மக்கள் தம் சிறப்பை இழந்து அடிமைப்பட்டு அல்லலுற்றுக் கிடப்பதற்கு அவர்கள் தம் முழு வரலாற்றையும் அறிந்து கொள்ளாமையும் ஒரு பெருங் காரணமாகும். இக்கால் தமிழர் நாட்டு வரலாறு, இனவரலாறு, மொழி வரலாறு முதலிய பெயர் தாங்கி உலவும் வரலாற்று நூல்கள் பலவும் பெரும்பாலும் இடையறவுபட்ட சிற்சில நிகழ்ச்சிக் குறிப்புகளாயும், கருதலளவையால் முடிபு செய்யப்பட்டனவாயும், கற்பனை விரவினவாயுமே இருக்கின்றன. எனினும் இருக்கின்ற சிற்சில சான்றுகளை மட்டுமேவைத்துக் கொண்டு உண்மையை நிறுவிக் காட்டுதலும் அரிய செயலேயாம். இந்நிலையில் தமிழர் நாடு, இனம், மொழி முதலியனபற்றி வெளிவரும் வரலாற்று நூல்கள் நம் வரவேற்புக்கு உரியனவாகவே இருத்தல் இயல்பேயாம். ஆயினும் அவ்வரவேற்பின் அளவை அவ்வந் நூல்களின் தகைநிலைபே முடிவுகட்டுதல் வேண்டும்.

மொழிச்சிறப்பு பற்றியும், தமிழ் காப்பு பற்றியும் நூலின் பல விடங்களினும் விரித்துப்பேசும் இந்நூலாசிரியர் மொழியாவது உணர்வு முனைப்பினுற்றேன்றி அறிவு வளர்ச்சிக்கு உறுதுணைநின்று

கலை பண்பாடு வரலாறு முதலியவற்றை வெளிப்படுத்தும் பெற்றிய தென்பதையும், அவ்வெளிப்பாட்டுக்குச் சொல்லாராய்ச்சி மிகவும் இன்றியமையாததா மென்பதையும் உணரமாட்டாராய் உயர்திரு மறைமலையடிகளார் சைவ வைணவங்கள் தமிழர் சமயமென்று சொற் பிறப்பாராய்ச்சி மூலம் நிறுவுவதாகக் கூறி, அதை மறுத்துரைக்கப் புகுந்து "இன்று சொற்பிறப்பாராய்ச்சி செல்வாக்கிழந்த ஒன்று" என்றுரைத்து அதற்குச் சான்று பேச அறிஞர் பிரில் என்பாரை அழைத்துவந்து நிறுத்துகின்றார். அதுவேயுமன்றி அக்கருத்தை மேலும் வலியுறுத்துதற்குத் திரு. வையாபுரியாரையும் இழுத்துப்பேசி வழுக்கிச் செல்லுகின்றார்.

இனிக் கலித்தொகையும், பரிபாடலும், திருமுருகாற்றுப் படையும் பிற்காலத்தவை யென்றுகூறி, அவை ஒன்பதாம்நூற்றாண்டில் தொகுக் கப் பெற்றனவென்னும் திரு. வையாபுரியாரின் கொள்கையைப் பெரிது படுத்திக் கூறிச் செல்லுகின்றார். அன்றியும் மாணிக்கவாசகர் காலம் மூன்றாம் நூற்றாண்டேயென்னும் பேரறிஞர்களின் ஆராய்ச்சி முடி வைச் சிறிதும் உடன்படலோ மறுத்தலோ செய்யாது வறிதே எட்டாம் நூற்றாண்டுப் பகுதியிற் கூறிச் செல்லுகின்றார்.

"இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்" என்னுங் கலித தொகையடியைத் தேராது சிவன் முப்புரம் எரிந்த கதை சிலப்பதி காரம் முதலிய பிற்கால நூல்களிற்றான் காணப்படுகின்ற தென்பதும், இன்ன பிறவும்

"கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்"

என்னுந் தெய்வத் திருக்குறளின்படி இவர்தம் கழகநூற் பயிற்சி யிலேயே ஐயப்பாட்டை விளைவிக்கின்றன.

இந்தியத் துணைக்கண்டத்துத் தோன்றிய மதமெல்லாம் இந்து மதமேயா மென்றும் இந்துமதமென்று தனியே யொன்றில்லை யென்றும் அறியாது இந்துமதமென்று தாமே ஏதோ ஒன்றை யெண்ணிக் கொண்டு அதற்கு மூலக்கடவுள் கிருட்டிண பரமாத்மாவென்றும், பிற வாறும் பற்பல விடங்களிற் கூறிச் செல்லுவதும், தாமெழுதுவது வரலாறு என்பதையும் மறந்து சமணர் கழுவேறினமை முதலிய சான்றில்லாதனவும் பிற்கால நூல்களினும் கட்டுக்கதைகளினும்

கூறப்பெற்றனவும் ஆகியவற்றுள் மெய்யும் பொய்யும் ஆராய்ந்து கொள்ளுவகொண்டு தள்ளுவதள்ளமட்டாது அவையெல்லாம் உண்மையென்றேகொண்டு எழுதிச் செல்வதும் இன்னோரன்னவும் இவர் தம் சமய நூற் புலமையின்மையையும் வரலாறு எழுதும் முறைமையறியாமையையும் புலப்படுத்துகின்றன.

"தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்னும் திருக்குறளிலுள்ள முயற்சி என்னும் சொல்லைக் கைவிட்டு உழைப்பு என்னும் சொல்லைப் பெய்துள்ளமை இவர் தம் கவனக் குறைவை அல்லது அறியாமையை வெளிப்படுத்துகின்றது.

நூலின் பல விடங்களினும் கௌவரம், பிரசாரம், யோசனை, பரிதாபம், துரதிருஷ்டம் முதலிய வட சொற்களும், எல்லாந்தான், ஒன்றல்ல, என்பது அல்ல, எழுச்சியும் வீழ்ச்சியும் ஏற்பட்டது; முடுக்கி விடுவதாய் இருக்கின்றன முதலிய பால்வழுக்களும், தெலுங்கில் சான்ற வாடு என்று அழைத்து அவமானப் படுத்தப்பட்டனர். முதலிய வினைமுடிபுப் பிழைகளும், 'எல்லையை தெற்கே' முதலிய ஒற்றுப் பிழைகளும் இவைபோல்வன பலவும் மலிந்துள்ளன.

பொதுவாக நூல் உணர்ச்சியோட்டமுடையதாயும், தமிழர் தம் தனித்தன்மையை நிறுவ முயலுவதாயும் இருக்கின்றமையும், இந்திய தேசிய ஒருமைப்பாடு என்பது ஓர் இல்பொருளெனவும், அவ்வொருமைப்பாட்டைப் புதிது புனைய வடக்கர் செய்யும் அடக்குமுறைகளும் வீரகாண்மையும் செல்லாவென்றும் வன்மையாகக் கழறுகின்றமையும் தமிழ்நாடு தனித்து வாழல் வேண்டுமென்னுங் கருத்தை வெளிப் படுத்துகின்றமையும் வரவேற்கத் தக்கனவாய் இருக்கின்றன. இருப்பினும் தமிழர்களுக்கு முழுமையான வரலாற்று நூலில்லை என்னுங் குறையைத் தம்நூல் ஓர் எள்ளளவும் போக்கமாட்டாது என்பதையும், "வரலாற்றை ஆராயும் ஆசிரியர்கள் தத்தம் கொள்கைகளைப் புகுத்தாமல், தனிவழிச்செல்லாமல், உள்ள சான்றுகளைக்கொண்டு ஆராய்ந்து ஒருபக்கம் சாயாமல் தம் நூற்களை எழுதவேண்டும்" என்று தாம் எழுதியுள்ளமையைத் தாமே கடைப்பிடிக்கத் தவறியுள்ளமையையும் இந்நூலை எழுதியவர் இதுகாறும் எண்ணியிருக்காவிடினும் இனியாயினும் எண்ணிப்பார்ப்பாராக!

—இறைக்குருவன்.

பாட்டரங்கம்

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி னுலென்ன ?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு !

குமுக நிலை. அ. இராமசாமி, கோவை-4.

குமுகாயப் புன்மைநிலை நோக்க நோக்கக்
கூருகிராய் நெஞ்சத்தைக் கீறும்; வாழ்வில்
இமையாது பாழ்வயிற்றின் பொந்தி கைக்கே
எஞ்ஞான்றும் உழைத்தவரோர் கவளமின்றிக்
குமைந்துள்ளம் எரிந்தழியும் நிலையும் பார்க்கக்
கொடுநிலையைப் பறைசாற்றி உயர்ந்து நிற்கும்
அமைந்திருக்கும் இந்நிலைகள் யாவும் மாந்தன்
அமைத்தவைதாம்; கெடுத்தழித்தல் செய்தல் நன்றே!

முட்டைவிட்டுச் சிதர்ந்தோடும் நெல்லிக் காய்போல்
மூலைக்கொன் றுய்ச்சிதறும் மக்கள் தம்மின்
ஈட்டமிங்கே ஒற்றுமையாய்ச் சேர்த லுண்டோ!
எவ்வாறுய் இருந்தாலும் வாழ்விற் கேதான்
தேட்டையிட்டே அவர்வருந்தி அலைகின் றுரே;
சிற்றளவுத் தண்ணீரும் நிற்க வொல்லா
ஓட்டைமிகு சட்டியெனும் குமுகச் சட்டம்
ஒழிந்துவிடும் நாளேதான் உய்தி நாளாம்!

மொழியாற்றுன் ஒற்றுமையும் அமையும் ஓர்க!
மொழியாலே பண்புக்கு வளர்ச்சி உண்டாம்;
மொழியாலே அகவாழ்க்கை சிறத்தல் கூடும்;
மொய்ம்புறுநல் வாழ்க்கைக்கும் ஒழுக்கஞ் சான்ற
வழிகாட்டி உயர்வுறுத்தும் என்று சொன்னுல்
வாய்மையொடு சிவணியநற் சொல்லாய்க் கொள்ளா
இழிமாந்தர் ஒழிந்துவிட்டால் நினைக்குந் தோறும்
இன்பூட்டும் குமுகாயம் முகிழ்க்கும் அன்றே?

உழைக்குமினம் துன்பத்தில் உழன்று வாட
ஓரிடமே குவிந்துவிடும் செல்வம் கொண்டு
தழைப்பவர்கள் எல்லாரும் குழுகா யத்தில்
தழைத்துவிட்ட மாந்தவினக் களைக ளாவார் ;
கழைக்கூத்தில் நுனிமரத்தில் ஏறிவிட்டோன்
காட்சிக்காய் நடிக்குநிலை உன்னுவீரே.
உழைப்பார்கள் பொருள்வெளவி உயர்ந்தமாக்கள்
உண்மையாய் நிலையிழியும் காட்சி சேய்த்தோ ?

சேய்த்தன்று நனி அணித்தே ; நாமுயன்று
செய்கின்ற செயலளவால் அணித்தே ஆகும் ;
ஏய்த்துப்பொய் உருவாக உழலும் இந்த
இழிஞர்களை நிலைகெட்டுச் செல்வம் போக
மாய்த்துவிடும் நாளேதான் துறக்கப் பேறும் ;
மகிழ்ச்சி யொன்றே நிகரமைவால் பெற்ற அந்நாள்
காய்த்துவிடும் ; கனியாகும் ; சுவையும் சேர்க்கும் ;
கயவர்களே ஒழிந்திடுவார் வாழ்க்கை கூடும் !

ஒழிப்போம் வாரீர் ! காழி - தமிழ்மகன்.

புலிவென்றாள் முறத்தாலே என்றே கூறிப்
புகழ்கின்றார் மறக்கற்பை ; ஆனா லிங்கோ
வலி வில்லா பெண்ணொருத்தி தம்மை ஓராள்
வதைத்துப்பின் கற்பழிக்குங் கதையைக் காட்டிப்
புலிவென்ற பெண்மையினை அழிக்கின் றார்கள் !
புன்மைவழி திரைப்படத்தில் காட்டுகின்றார் ;
சளிபிடித்து விட்டநிலை; தமிழைச் சொல்லி
சதிராடு மிக்கும்பல் ஒழிவ தென்றோ ?

நுனிப்புல்லி னோரத்தைக் கடித்துத் துப்பும்
நோய் கொண்ட ஆடென்னு முருவிலுள்ளோர்
தனிபாடல், பாவியங்கள் ஆயிரத்தைத்
தாங்கற்று விட்டதைப்போல் நினைத்துக் கொண்டு
கனைப்போடு தமிழ்மேடை யேறு கின்றார்;
கனவெல்லாம் காசென்றே காணுகின்றார் !
இனிப்பான அரைசியலைத் தடவி விட்டே
என்னருமைத் தமிழ் நாட்டை அழிக்கின்றாரே!

இழுக்கான பாட்டெழுதி அச்ச டித்தே
இலக்கணத்தி லிஃதொன்றும் எனவே கூறி
வழக்காடு கின்றூர்கள் ; அவரை யெல்லாம்
வாழ்த்திடவு மொருகூட்டம்; தமிழ்ம ரத்தில்
பழுக்காத கனிக்கெல்லாம் பட்டம் ; இந்தப்
பச்சோந்தி நிலையென்று பறக்கு மம்மா ?
கொழுக்காத தலைவனெவன் ? தமிழைக் காட்டிக்
கொடுக்காத தலைவனெவன் தமிழ கத்தே ?

நமக்குப் பகை...! கயற்கண்ணன்.

நந்தமிழில் பிறமொழியைக் கலப்போர், வேற்று
நாட்டார்க்குக் காவடிதான் எடுப்போர், நானும்
சொந்தநலம் பேணுதற்கே உழைப்போர், சாதிச்
சூழலிலே தம்புகழை வளர்ப்போர், மேலோர்
தந்திறனை எண்ணத்தைக் கள்வோர், வேண்டும்
சிலருக்குப் பெரும்பதவி யளிப்போர், ஏழை
தொந்தரவைக் கண்டென்றுங் களிப்போர் "நாட்டின்
தொழுநோயே!" அவர்நமக்குப் பகையே யாவர்!

பேச்சாலே தமிழ்மொழியைச் சிதைப்போர், ஏட்டில்
பிழைபடவே கதைஎழுதிக் கதைப்போர், வேற்கண்
வீச்சாலே பொருள்தன்னைப் பறிப்போர், தாளில்
விளம்பரமாய் அவருருவைப் பதிப்போர், சொல்லின்
வீச்சாலே அரசியலில் நடிப்போர், யாண்டும்
விலங்கேபோல் வீண்காலங் கழிப்போர், வாழ்வின்
மூச்சாகப் பணத்தினையே மதிப்போர், "நாட்டில்
முட்புதரே! அவர்நமக்குப் பகையே யாவர் !

உண்பொருளில் கலப்படமே செய்வோர், நாளும்
ஊர்ப்பொருளை உலைப்பொருளாய்க் கொள்வோர், மூச்சு
நண்பர்களின் செய்ந்நன்றி கொல்வோர், சான்றோர்
நன்மொழியை ஏளனமே செய்வோர், நாட்டுப்
பண்பதையே பாழ்செய்யும் கீழோர், ஊழல்
பரவிடவே வகைசெய்யும் தீயோர், உண்மைத்
தென்மொழியைப் புன்மொழியால் காய்வோர் "நாட்டில்
தேள்கூட்டம்!" அவர்நமக்குப் பகையே யாவர்!

தமிழாட்சி வேண்டும். இரா. தமிழரசு, பறம்பை

உயிரான தமிழின்றி ஒருநொடியும் வாழோம்
உடலான சதைஇன்றே ஒழியட்டும் வாரீர் !
பயிராக வளர்ந்துநாம் பட்டதெல்லாம் போதும்
பண்டுதமிழ் நாடெமதே என்றுரைப்போம் வாரீர்!
முயலாமல் தேனுண்ண முடியாதாம் என்னும்
முனைப்புடனே வேலெடுத்துப் போராட வாரீர்!
வயலான சாக்காட்டில் வளவாழ்வு காண்போம்
வளமார்நம் தமிழ்நாட்டை மீட்டிடவே வாரீர்!

கடலாலே செந்தமிழர் பிரிந்திட்ட போதும்,
உடலாலே மொழியாலே ஒன்றுதல் கண்டீர்!
வடவரைக்கும் குமரிக்கும் இடைவாழ்ந்த நாமே
வாழுதற்கு நாடற்று வாழுநிலை கண்டீர்!
அடலேறு மறவர்கள் பலஇலக்கம் பெற்றும்
ஆளுகின்ற வடவர்க்கே நாமடிமை கண்டீர்!
சுடரோடு போராடும் கற்புடைய பெண்டிர்
சோற்றுக்குக் கருவழித்து மாளுநிலை கண்டீர்!

துண்டுபட்ட நந்தமிழர் ஒன்றுபடல் வேண்டும்!
தூள்தூளாய் மிடிமையினைச் சிதறடிக்க வேண்டும்!
பண்பட்ட வள்ளுவமே நமையாள வேண்டும்!
பைந்தமிழே என்றென்றும் உலகாள வேண்டும்!
தொண்டர்க்குத் தொண்டர்களாய் நாம்வாழ வேண்டும்!
சோம்பேறி மகனுக்குச் சாக்காடும் வேண்டும்!
பண்டார்ந்த பண்பாட்டுத் தமிழாட்சி கண்டால்
பாரினிலே தமிழர்க்குப் பிறர்துணைஏன் வேண்டும்?

தலைவன் வேண்டும். இமயத்தலைவன்.

அச்சத்தை எடுத்தெறிந்த தலைவன் வேண்டும்!
அல்லற்குத் தலைகொடுக்கும் தலைவன் வேண்டும்!
எச்சத்தை மதிக்காத தலைவன் வேண்டும்!
எந்தமிழின் நலன்காக்கும் தலைவன் வேண்டும்!
முச்சந்தி நாற்சந்தி மூலையெல்லாம்
முத்தமிழை முழக்குகின்ற தலைவன் வேண்டும்!
அச்சத்தில் வீழ்ந்துழலும் மக்கள் தம்மை
அடித்தெழுப்பி அறிவூட்டும் தலைவன் வேண்டும்!

அச்சக அமைப்புக் கடன் திட்டம்

(1—8—66 முதல் 5—10—66 முடிய) அலுவலகத்திற்கு வந்த தொகைகள்)

கடன்

		உருபா	எண்
க.	நூறு உருபா வகை.		
	திரு. இரா. இரத்தினம் பி. ஏ. பி. டி. குமாரமங்கலம்	100	18

அன்பளிப்பு.

திரு. தே. உலூர்து எம். ஏ. பாளையங்கோட்டை	5
திரு. தேவநேயன் வழி திரு. ப. முத்துசாமி தெற்கு ஐயம்பாளையம் திருச்சி	10
திரு. தி. கு. சண்முகம், சென்னை 4.	1
ஒன்பதாம்முறையாக: திரு. பு. கா, பாலசுப்பிரமணியம் செயலாளர் மறைமலையடிகள் மன்றம் பு. புளியம்பட்டி	1
அவர் வழி : மறைமலையடிகள் மன்றம்	1
திரு. இரா. ஆறுமுகன்.	1
திரு. ஆடலரசு.	1

முன்பக்கத் தொடர்ச்சி.

சொன்னமொழி பிறழாத தலைவன் வேண்டும்!
சொல்லடுக்கிற் சுவையடுக்கும் தலைவன் வேண்டும்!
தன்னலமே அறியாத தலைவன் வேண்டும்!
தாய்நாட்டின் நலன்காக்கும் தலைவன் வேண்டும்!
பொன்னிலமே உயிர்மெய்யென் றுழைத்து ழைத்துப்
புதுவாழ்வில் நமைப்புகுத்தும் தலைவன் வேண்டும்!
முன்னிறுத்தி அணுக்குண்டை முடுக்கி னாலும்,
முகத்திலுரம் மறையாத தலைவன் வேண்டும்!

மாலைமணம் விரும்பாத தலைவன் வேண்டும்!
மக்கள்நலம் பேணுகின்ற தலைவன் வேண்டும்!
சோலையெனும் வாழ்வியற்றும் தலைவன் வேண்டும்!
சுடுநெருப்பில் குளிக்கின்ற தலைவன் வேண்டும்!
பாலைநிலச் சுடுமணலைப் பஞ்சு மெத்தைப்
பழக்காடென் றெண்ணுமிளந் தலைவன் வேண்டும்!
ஆலையிலே இட்டசுவைக் கன்னல் போல
அழிவேற்றும் பிறர்க்குதவும் தலைவன் வேண்டும்!

திரு. அருணகிரி, 1
திரு. சு. பாலசுப்பிரமணியம். 1
பொ. குமாரசாமி, குருநாதம்பாளையம்
கோவைமாவட்டம் 5
சா. க. பழனிசாமி சாந்தப்பாடி திருச்சிமாவட்டம் 5
திரு. யா. இராயப்பன் பி. ஏ, உதகமண்டிலம்—1. 3
திரு. த. தனராசன் பூண்டி. 1
திரு. இரா. பதுபநாபன் பெங்களூர்—3. 5
திரு. செ. பாலசுப்பிரமணியன் சென்னை—17. 10
திரு. மா. அருணாசலம் தமிழாசிரியர்,
கொடுவாய் (அஞ்) 2
திரு, ப, கு. சுப்பையன். நம்பியூர் வழி:
1. திரு. குருசாமி, வேளாண்மைக் களப்பணியாளர். 1
2. முருகையன், சர்வோதயசங்கம், 4
10-ஆம் முறையாக:
திரு. பு. கா. பாலசுப்பிரமணியம் செயலாளர்,
மறைமலையடிகள் மன்றம். 1
அவர்வழி : 1. மறைமலையடிகள் மன்றம்
பு. புளியம்பட்டி. 1
2. திரு. இரா. ஆறுமுகன் 1
3. திரு. சு, பாலசுப்பிரமணியம். 1
4. திரு. ஆடலரசு, 1
5. திரு. கு. சுப்பையா. 1
திருவாளர்கள் கோ. வே. சுப்பிரமணியம், சண்முக சுந்தரம், ஒண்டிப்புதூர்; வே. செகந்நாதன் ஆகிய மூவரும் கோவை கல்லூரி மாணவர்களிடமும் தமிழன்பர்கள் சிலரிடமும் திரட்டியளித்த தொகை. 103
உதயை மு. வீரையன் தமிழாசிரியர்,
ஆலத்தம்பாடி (தஞ்சைமாவட்டம்) அவர்வழி :
1. திரு. மு. நமசிவாயம் (முருகவளவன்) 10
2. திரு. வீ. கோவிந்தராசன், நாச்சிகுளம். 2
பினாங்கு (மலேசியா) அன்பர்கள் திருவாளர்கள்
இரா. பாண்டியன், க. சத்திவேல், கா. சித்திரவேல், சி. முத்தழகன் ஆகிய மூவரும் பினாங்குவாழ் மருத்துவர்களிடை திரட்டி விடுத்த தொகை. 500

சோலையார்பேட்டையை அடுத்த வக்கணம்பட்டி
தமிழ்மன்றத்தின் சார்பாகத் தமிழ்நாடன்
திரட்டி விடுத்த தொகை :

சோலையார்பேட்டை உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் :

தனபால்	0	50
சாமன்னன்	0	50
மாணிக்கம்	0	50
சாந்தா	0	50
சாந்தகுமாரி	0	50
இந்திராணி	0	50
பாலமுருகன்	0	25
சாமராசு	0	25
பத்மநாபன்	0	25
ஆதித்தன்	1	00
இளங்கோ	1	25
அருள்	5	00
அகமதுபாட்சா. ஆசிரியர் ஊராட்சி ஒன்றியபபள்ளி	1	00
பாண்டுரங்கன். ஆசிரியர்	1	00
ப. மனோகரன், தாமலேறிமுத்தூர்	1	00
சீனிவாசன், "	1	00
ஆ. இராதாகிருட்டினன் (தமிழ்நாடன்)		00
திரு. கு. கிருட்டிணன் கோவை—1.	20	
தரங்கம்பாடி தமிழாசிரியர் ஒருவர் (முதல்முறை அன்பளிப்பாக)	5	

இப்பட்டியலில் வந்த தொகை விளக்கம்

க.	கடன்: 100-உருபா வகை	100	
உ.	அன்பளிப்பு	722	
	மொத்தம்	822	
	முன்மொத்தம்	6839	64
	தொகு மொத்தம் :	7661	64

வெளிவந்துவிட்டது !

மொழிப்பெரும் புலவர்

கலைத்தலைவர். ஞா. தேவநேயப் பாவாணர்

எழுதிய அரிய ஆராய்ச்சி மொழிநூல்

THE PRIMARY CLASSICAL LANGUAGE OF THE WORLD

ஆங்கிலம்

உலக மொழிகளினின்று வேறுபட்ட தமிழ் மொழியின் தொன்மை, முன்மை, தாய்மை, தூய்மை, தனிமை, இனிமை, வளமை, இளமை ஆகிய எட்டுத் தனிப் பண்புகளையும் உலகெலாம் உணர்ந்து கொள்ளுமாறு, பாவாணர் தம் அஃகியகன்ற ஆராய்ந்த புலமை முற்றும் விளங்க ஆங்கிலத்தில் எழுதிய ஈடும் எடுப்பும் அற்ற முழுமையான மொழி நூல்.

விலை உருபா 15

கிடைக்குமிடம்

பாரி நிலையம்

59, பெருவழி (BROADWAY)

சென்னை-1.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.